பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

90 A/L
பிரிவு II
(SAT & SUN)
9-30 — Pure Maths
10-30 — Applied Maths
9-30 — Zoology
10-30 — Botany
11-30 — Chemistry
12-30 — Physics
NEW MASTER
INSTITUTE
B. M. C. Lane, JAFFNA.

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

90 A/L
பிரிவு II
நடைபெறுகிறது.
பிரிவு I இற்கு
அனுமதி இல்லை.
(எமது வழமையான
ஆசிரியர் குழுவினால்)
NEW MASTER
INSTITUTE
B.M.C. Lane, JAFFNA.

கூர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஜூல ஆடி மீ 12 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 12 (27 – 07 – 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 142

இலங்கை—இந்திய ஒப்பந்தம்:

புதுடில்லியில் புதிய சிந்தனை

இரண்டில் ஒன்றுக்குத் திட்டம்

எதனை முடிவாகக் கொள்வது என்பதில் சிக்கலும் குழப்பமும்

சென்னை, ஜூலை 27

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை அமுல்செய்வது குறித்து இந்திய அரசு - புதுடில்லி அதிகாரிகள் புதிய சிந்தனையுடன் செயற்படுவதாக "இந்து" நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

1. சாத்தியமானால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமரசத்துக்கு வருவது.

2. அவசியம் ஏற்பட்டால் அவர்களை விட்டுவிட்டு ஒப்பந்த அமுலுக்கு வகைசெய்வது.

இதுவே புதுடில்லி அதிகாரிகளின் புதிய சிந்தனை ஆனால் மேற்கண்ட இரண்டில் எதனைக் கைக்கொள்வது என்பது குறித்து முடிவுக்கு வரமுடியாத நிலையில் உயர்மட்டம் குழப்பமும், திண்டாட்டமும் அடைந்திருப்பதாகவும் "இந்து" பத்திரிகை மேலும் தெரிவித்திருக்கிறது.

"இந்து" பத்திரிகை இது சம்பந்தமாக வெளியிட்ட செய்தி ஒன்றின் சாராம்சம் வருமாறு:-

மாகாணசபைத் தேர்தலில் பங்கு பெறச் செய்வதன் மூலம் போராளிகளை அரசியல் நடைமுறைக்கு கொண்டுவரும் முயற்சிகளுக்கு முடிவே காணப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்ற இந்த நிலையில் மேலே கூறப்பட்ட புதிய சிந்தனை புதுடில்லியில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இந்திய அமைதிப் படையின் இராணுவ ரீதியான நிர்ப்பந்தம் காரணமாக மோதல் நீடிப்பதில் உள்ள பயனின்மையை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் உணர்ந்து கொள்வார் என்ற முன்னைய மதிப்பீடு மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று கருதப்படுகிறது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பங்கு பற்ற வேண்டும் என்பதில் இந்தியா இன்னும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் 4 ஜவான்கள் பலி!

வவுனியா மாவட்டத்தில் நேற்று இடம் பெற்ற மோதல் ஒன்றில் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த நான்கு ஜவான்கள் உயிரிழந்தனர்.

இம் மோதலில் 9 போராளிகளும் உயிரிழந்தனர் என்று இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய வதந்தி!

யாழ்ப்பாணம், மானிப்பாய், குருநகர் பகுதிகளில் நேற்று மாலை 3 மணியுடன் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டதாக நகரெங்கும் பரவலாக வதந்தி பரப்பப்பட்டது.

இதனால் இப்பகுதிக

(8 ஆம் பக்கம் பார்க்க)

திருமலையில் ஊரடங்கு: சொன்னதும்.... ....செய்ததும்!

யாழ்ப்பாணம், ஜூலை 27

திருகோணமலைப் பகுதியில் நேற்று ஊரடங்கு அமுலில் சொன்னது ஒன்று செய்தது ஒன்றாக இருந்தது.

நேற்றுக் காலை ஆறு மணிக்குத் தளர்த்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் மீண்டும் நண்பகல் 12 மணிக்கு அமுல்படுத்தப்பட்டது.

நேற்று முழுநாளும் திருகோணமலைப் பட்டினத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு பகல் நேரம் முழுவதும் தளர்த்தப்படும் என திங்கட்கிழமை யன்று அறிவிக்கப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஜி. சீ. ஈ. பரீட்சை 29,30 இல் இல்லை! நேரசூசியில் மாற்றம்

கொழும்பு, ஜூலை 27

தற்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கும் ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையின் நேரசூசியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் திரு. ஸ்டேர்லிங் பெரேரா நேற்று அறிவித்தார்

இதன்படி இப்போதைய நேரசூசிப்படி இம்மாதம் 29, 30 ஆம் திகதிகளில் நடைபெறவேண்டிய பரீட்சைகள் முறையே அடுத்த மாதம் 16, 17 ஆம் திகதிகளில் நடத்தப்படும்.

அடுத்த மாதம் 16, 17 ஆம் திகதி நடைபெற வேண்டிய பரீட்சைகள் முறையே அவற்றுக்கு அடுத்த தினங்களான 18, 19 ஆம் திகதிகளில் நடத்தப்படும்.

இப்படி பரீட்சை ஆணையாளர் ஸ்டேர்லிங் பெரேரா தெரிவித்தார். (ஒ – எ)

9 ஆம் திகதி காங்கேசன் வந்த அகதிகளுக்கு அடையாளக் கார்ட்

சனிக்கிழமை வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 27

சென்ற 9 ஆம் திகதி தமிழகத்தில் இருந்து கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு வந்த அகதிகளுக்கு அடையாளக் கார்ட்டுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

★ அடையாளக் கார்ட் பெறுவதற்காக 17 வயதுக்கு மேற்பட்ட வர்கள் அனைவரும் காங்கேசன்துறை நடேஸ் வராக் கல்லூரிக்கு 30-07-88 வரவேண்டும்

★ அன்று காலை 8.30 மணி முதல் பகல் 10.30 மணி வரை மட்டுமே அடையாளக் கார்டுகள் வழங்கப்படும்.

★ பிந்தி வருவோர்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

★ வரும்போது இந்திய அதிகாரிகள் வழங்கிய அகதிகள் கார்ட்டையும் கொண்டு வர வேண்டும்.

இப்படி யாழ் அரச அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார். (ஒ-எ)

சுபநேரம்

27- 7 - 1988
ஆடி – 12
புதன்கிழமை
சுபநேரம்:
04-32 முதல் 06-02 வரை
ராகுகாலம்:
12-02 முதல் 01-32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இராமநாதபுரம் காட்டை நோக்கி ஓயாத ஷெல் வீச்சு!

வட்டக்கச்சி, ஜூலை 27

வட்டக்கச்சி, இராமநாதபுரம் காட்டுப் பகுதி நோக்கி இந்திய அமைதிப்படையினர் தீவிர ஷெல் தாக்குதல்களை ஓயாது மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றும், நேற்று முன்தினமும் இத் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்றவண்ணமிருந்தன.

155 ஆம் கட்டைப் பகுதியிலுள்ள இராணுவ முகாமில் இருந்தும், வேறு இராணுவ முகாம்களில் இருந்தும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரியவருகிறது.

இத்தகைய தொடர்

(8ஆம் பக்கம் பார்க்க)

செயலகத்திற்குள் செல்வதற்கு நின்ற 'கியூ'

யாழ்ப்பாணம் ஜூலை 27 நேற்று யாழ். செயலகத்திற்கு தமது சொந்த அலுவல்கள் காரணமாக வந்தவர்கள் பலத்த சோதனையின் பின்னரே செயலகவளாகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த வாரம் செயலகச் சுற்றுடலில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து நேற்றைய தினம் செயலகம் இயங்க

(8ஆம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரிக்கு 'எயிட்ஸ்' பரிசோதனைக் கருவி

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். போதனா வைத்தியசாலைக்கு 'எயிட்ஸ்' பரிசோதனைக் கருவி ஒன்றை வழங்க கொழும்பு மத்திய மேகநோய் தடுப்பு நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போழுது எயிட்ஸ் நோய் வெளி நாடுகளில் தீவிரமாகப் பரவி வருவதன் காரணமாகவும், யாழ்ப்பாணத்திலும் இந் நோய் ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறதா எனக் கண்டு பிடிப்பதற்காகவும் இக்கருவி யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் "எயிட்ஸ்" பரிசோதனைக் கருவியின் அவசியம் பற்றி மத்திய மேகநோய் சிகிச்சைப் பிரிவுக்குத் தெரியப்படுத்தி இருந்தார்.

(ஒ–10)

படை முகாம்கள் முன்பாக வீதித் தடைகள்

யாழ்ப்பாணம் ஜூலை 27

யாழ். குடா நாட்டில் உள்ள இந்திய அமைதிப்படையினரின் முகாம்கள் முன்பாக புதிதாக வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முகாமைக் கடந்து செல்லும் வாகனங்கள் வேகத்தைக் குறைத்தும், வளைந்து, வளைந்தும் செல்லப் பணிக்கப்பட்டுள்ளது.

சில முகாம்கள் முன்பாக வாகனப் போக்கு வரத்து முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் கச்சேரியடி இராணுவ முகாம் "சென்றி" மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்தே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முகாம்கள் முன்பாக சோதனை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

(ஒ–10)

முச்சந்தி முரளி

ஓம், ஓம் அவருக்கு கனவும் நினைவும் வடக்கு கிழக்கில் மக்கள் விருப்பத்துக்கு மாறுபட்டுத் தேர்தலைத் திணிப்பது தானே.....!

திருமலையில் இனமோதல் மூள கோயிற் கடலில் சடலங்கள் என்ற தகவலே காரணம்

— திருமலையில் இருந்து அலுவலகப் பிரதிநிதி ந. வித்தியாதரன் —

திருகோணமலை, ஜூலை 27

திருகோணமலை நகரப் பகுதியில் இனமோதல்கள் கடந்த சனியன்றும் தொடர்ந்து இடம்பெற்றன. அதனை அடுத்து 42 மணி நேரத்தின்பின்னர் - அன்றைய தினம் காலையில் – நீக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு உடனடியாக – மதியம் 12 மணிக்கு மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை (21-7-88) திருகோணமலை சந்தைப்பகுதிக்கு அருகே சிங்களக் கடை ஒன்றில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து அங்கு இனமோதல்கள் மீண்டும் தலைதூக்கியது தெரிந்ததே.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து வியாழக்கிழமை நண்பகலில் உடனடியாகக் கொண்டு வரப்பட்ட ஊரடங்கு உத்தரவு கடந்த சனிக்கிழமை காலையில் தளர்த்தப்பட்டது.

ஐந்தாவது மரணம்

எனினும் ஊரடங்கு தளர்த்தப்பட்ட கையோடு மீண்டும் வன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக அனுமதி:

பொறியியல் - 60 மருத்துவம் - 37

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்மாவட்டத்தில் இருந்து இம்முறை 60 மாணவர்கள் பொறியியல் துறைக்கும், 37 மாணவர்கள் மருத்துவத் துறைக்கும் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். எல்லாத்துறைகளுக்கும் மொத்தமாக 536 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

ஒவ்வொரு துறைக்கும் தெரிவான மாணவரின் எண்ணிக்கை வருமாறு.

மருத்துவம் – 37, பொறியியல் – 60, விவசாயத்துறை – 25, கலை, வர்த்தக பீடங்கள் – 232, உயிரியல் விஞ்ஞானம் – 70, பௌதிக விஞ்ஞானம் – 88, சட்டத்துறை – 06, பல்வைத்தியத்துறை – 08, மிருக வைத்தியம் – 04, குவாண்டிட்டிசேவியர்–06.

(ஒ–10)

வடக்கு, கிழக்கு மாகாண சபை தேர்தலை சில வாரங்களில் நடத்தலாம்

ஜே. ஆரின் நம்பிக்கை இது

கொழும்பு, ஜூலை 27

வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலை இன்னும் சிலவாரங்களில் நடத்தலாம்என்று நான் நம்புகின்றேன்.

இவ்வாறு நேற்று மாலை கொழும்புத்துறை முகத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசும் பொழுது ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறினார்.

அவர் சொன்னதாவது:

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ரத்துச் செய்த பின்னர் நாட்டில் என்ன நடக்கும்? ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்கள் இதற்கான பதிலைத் தெரிவிக்கத்தவறி விடுகிறார்கள். ஒப்பந்தத்தை ரத்துச் செய்த பின்னர் அவர்கள் கொண்டு வர உள்ள மாற்றுத் திட்டம் தான் என்ன?

தமிழ் நாட்டில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகம், இலங்கையை இந்திய சமஷ்டியில் சேர்க்க வேண்டும் என்று விரும்புகிறது.

வடக்கும், கிழக்கும் ஒரு தனி நாடாக இருக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கோருகிறது.

அமைதி ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு இந்திய அமைதிப் படை இலங்கையை விட்டுப் போனால் புதிய யுத்தம்

(8 ஆம் பக்கம் பார்க்க

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்லஇன வளர்ப்பு மீன்கள் Gold Fish, Fightiers Angels, S - Tail Guramls மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. 'இரத்தினவாசா' கருவேலடி லேன், கொக்குவில் மிழக்கு. (பழைய புகையிரத வீதி) (5149)

பாவித்த வீட்டுத் தள பாடங்கள், அலுமாரி, கட்டில், மெத்தைகள், விருந்தைக் கதிரைகள், ஹோல்செற், Shaw Case, மேசை, கபேட், தையல் மெஷின், எல் ரூ டி மேசை, சாப்பாட்டு மேசை, கதிரைகள், பழையயன்லல் நிலைகள், குழாய்க் கிணறு பம்ப், Baby Cot, மற்றும் பல பொருட்கள் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ் சந்தியில்) (5136)

GOLDI Sausages எல்லாவகையான Sausages மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C.5624]

தேவை

உரும்பிராயில் புதிதாகத் திறக்கவிருக்கும் மருந்து விற்பனை நிலையத்திற்கு (பார்மலி) நல்ல அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் தேவை. 31- 07- 88இற்கு முன் விண்ணப்பிக்கவும். 303 C/o உதயன், யாழ்ப்பாணம். (5391)

வள்ளம் தேவை

17½ அடி இனோர் (Fibre Class) வள்ளம் தேவை. விலை விபரங்களுடன் நேரில் அல்லது கடிதமூலம் உடன் தொடர்பு கொள்ளவும்; ந. அன்புராஜா, நவாலி கிழக்கு, மானிப்பாய். (5388)

TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் திறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna; Samy & Co Shabra அருகாமையில். (C5300)

யோகர் சுவாமி நற்சிந்தனை ஆராதனை

யாழ்ப்பாணம், ஜூலை 27

யோகர் சுவாமிகள் நற்சிந்தனை ஆராதனை எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பூநகரி செல்லையா திவ்வியம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ள இந்த நற்சிந்தனை ஒதலும், விசேஷ யாகபூசையும் நாட்டில் அமைதி நிலவும் பொருட்டே இடம் பெறவுள்ளன.

அடியார்கள் இந்த வைபவத்தில் சுலந்து கொள்ளும்படி அழைக்கப்படுகிறார்கள். (சி)

கோழிக்குஞ்சு

Prima Lohmann வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் சிவப்பு சேவல் குஞ்சுகள் Hy-Line வெள்ளை கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன்முன்கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (C5626)

பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் புரோயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். சற்குண ராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன் கொக்குவில். மயூரா பாம் விற்பனை நிலையம் முன்பாக சாவகச்சேரி, மகேஸ்வரி ஹோட்டல் முன்பாக கரடிப்போக்கு பலத்தடி. கிளிநொசி. (4885)

இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (சி 5625)

WALL PAPER FOR SALE

உயர்ந்த ரக இத்தாலிய நாட்டு (Italy) சுவருக்கு ஒட்டும் வர்ணகடதாசிகள் இரண்டு டிசைன்களில் விற்பனைக்குண்டு. சுழுவிப்பாவிக்கக் கூடியவை. விபரங்கட்கு T. ஞானகுரு, 104/4, அத்தியடி குறுக்கு வீதி, அத்தியடி. யாழ்ப்பாணம். (C 5908)

இலங்கைப் புவியியல்

A/L வகுப்புக்குரிய இலங்கைப் புவியியல் வெளிவந்துவிட்டது. அபிவிருத்திப் புவியியல், எறியங்கள் என்பனவற்றின் புதிய பதிப்புகள் விற்பனையாகின்றன. ஆக்கியோன்: க. குணராசா M. A. பிரபல புத்தகசாலைகளில்கிடைக்கும். (5104)

HOME FINANCE DEPOSITORS UNION SRI LANKA

சம்பளி முடுவதை எதிர்த்து நாம் எடுத்த முயற்சி பயனளித்துள்ளது. எமது வருமதியை அறவிட எல்லோரும் எமது சங்கத்தில் சேர்ந்து போதிய பணஉதவி செய்யவும்.

கம்பனியை புதிய நிர்வாகம் கையேற்று உள்ளது.

சதா. ஸ்ரீநிவாசன்
சட்டத்தரணி

51/8 செட்டித்தெரு,
நல்லூர். (5150)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 1935—1—31

மறைவு: 1988—6—26

திருமதி பரமேஸ்வரி தங்கராசா

எங்கள் அன்புத்தாயே! எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே, எங்களையெல்லாம் அன்புடனும் பண்புடனும் வளர்த்து நல்வழி காட்டி கல்வியூட்டி இந்தஉயர்வான நிலைக்கு உயர்த்தி வைத்து ஈன்றபோதிலும் பெரிதுவந்த அருமைத்தாயேநீர்மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகெய்தி 31நாட்கள் சென்று விட்டன. 31 நாட்கள் அல்ல 31 ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தை விட்டகலாது.

உங்கள் நினைவுடன்:
பிள்ளைகள்.– சிவசுதன், வீரசுதன்.

சகோதரர்கள்: காலஞ்சென்ற: S. நடராசா
S. துரைசிங்கம்
S. தாமோதரம்பிள்ளை

சகோதரிகள்:– வைத்திலிங்கம்
நாகரத்தினம்மா
N. நேசமணி
வைத்திலிங்கம் இராசலட்சுமி
Miss. சின்னப்பு வள்ளியம்மை

'சின்னப்பு இல்லம்'
வட்டு மேற்கு
வட்டுக்கோட்டை. (5289)

FARM HOUSE

தரமான சோழித்தின் வகை, கறவைத்தின், முட்டை, இறைச்சிக்கோழி, நல்ல இனக் கோழிக் குஞ்சுகள் தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

Bairaha Farm ஒரு நாள் புரொயிலர், சேவல், பேடு குஞ்சுகள் 4/8/88 அன்று விநியோகிக்கப்படும்

முன் கூட்டிப் பதிவு செய்பவரும்.

பாம் ஹவுஸ்
கோட் றோட்
மல்லாகம்

(5146)

S. P. அன்ரன்

மகிழ்ச்சியுடன் அறியத்தரும்

வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

கனடா, ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ், அமெரிக்கா

இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது சிறு குழுக்கள் மூன்று கடந்த வாரம் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டன என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். நிச்சயமான பயண ஒழுங்குகளைச் செய்து தருகின்றோம்.

1. சிங்கப்பூர் கப்பல் வேலைவாய்ப்புகள்:

2. கனடா:
பணிப்பெண்கள்:
கனடாவில் கண்ணியமான குடும்பங்களில் வீட்டு வேலை வாய்ப்பு.

3. சவூதி அரேபியா:
(CATERING COMPANY)
உணவுத் தொழிலகத்தில் பணி புரிய தொழிலாளர்கள் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தேவை.
அடிப்படைச் சம்பளம்: 450 S. R.
ஓவர்டைம் உத்தரவாதம்.
உணவு இருப்பிடம் இலவசம்.

4. மாலைதீவு:
மாலைதிவுத் துறைமுகத்தில் பணிபுரியத் தொழிலாளர்கள் தேவை.
அடிப்படைச் சம்பளம்:
75 அமெரிக்க டொலர்கள்
ஓவர்டைம் உண்டு.
உணவு, இருப்பிடம் இலவசம்.

5. சிங்கப்பூர்-கிறில்-கனடா
வீட்டுவேலைப் பணிப்பெண்கள்
ஓரளவு ஆங்கில அறிவுடைய பெண்களுக்கு மேற்படி மூன்று நாடுகளிலும் கண்ணியமான குடும்பங்களில் வீட்டு வேலை வாய்ப்பு

6. சவூதி அரேபியா
கிளீனேர்ஸ்
ஆஸ்பத்திரி-எயர்போட் கிளீனேர்ஸ்
உடன் தேவை S.R 400
விசா முதலிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும் சகல விவரங்களுக்கும் உடனே தொடர்பு கொள்ளும்படி அன்புடன்
உங்கள் பயண அமைப்பாளர்

S. P. அன்ரன்
வேல் றேட் சென்ரர்
இல. 114, ஸ்ரான்லி வீதி,
(மக்கள் வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(C-5951)

Y. W. C. A.

நேரமாற்றம்

யாழ்ப்பாணம் நிம்மர் ஹோலில் நாளை 28ஆம் திகதி மாலை 4-00 மணிக்கு ஆரம்பமாக இருந்த All Members Day Social வைபவம் ஊரடங்கு உத்தரவு காரணமாக அதே தினம் மாலை 3-00 மணிக்கு ஆரம்பமாகும்.

(5401) Mrs. R. Ariaratnam.

ஹரன் வெண் திரையில்

தினசரி 10-30 — 2-30

திகிலூட்டும் சம்பவங்கள் நிறைந்த

Wanted Dead or Alive

(தேவை! பிணமாகவோ அல்லது உயிருடனோ)

அடுத்து!

ஆனந்த ஆராதனைகள்

(5290)

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்
ரகுவரன் - நிஷாந்தி - செந்தில்
மலேசியா வாசுதேவன் - மாதுரி

நடித்த

V. C. குகநாதனின்

"கைநாட்டு"

தென்னிந்திய திரையுலகின் தணிக்கைக் குழுவினரால் தணிக்கை செய்யப்பட்டு பல பிரச்சனைகளின் மத்தியில் வெளியான புதுமைப் படைப்பு.

Tour of Duty—II
— WAR FILM —

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C 5953)

31ம் நாள் நினைவஞ்சலி

திரு. நடராஜா (பாலசுந்தரம்)
இராஜேந்திரன் (இந்தி)

அன்னையின் மடியில் 8-11-1963
மண்ணின் மடியில் 27-6-1988

பாசத்தின் இருப்பிடமே!
அன்பின் அணையா ஒளி விளக்கே!
பல்கலையும் கற்றுப் பிறநாடு பல ஏகி
பல் மொழிகளையும்
தாய் மொழிபோல் பேசி
பெற்றோர், உடன்பிறந்தோருடன்
இங்கிதமாய் தானிருக்கும் வேளைதனில்
காலன் மனம் பொறுக்காமல்
தந்தை கலங்க! தாயோ தவிதவிக்க!
உடன் பிறந்தோர் ஏங்கியழப்!
பறித்தானே பாதகனும் – இனி
உன்னை எப்பிறப்பில் காண்போம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி,
தங்கைமார், புஷ்பாக்கா.

ஆஸ்பத்திரி வீதி,
மண்டைதீவு- 6. (5286)

லேட்டா செட்
(DATA SET)

உருக்குத் தளபாடங்கள் (Steel Furniture)

- எமது நிறுவனத்தின் உள்நாட்டுத் தயாரிப்பு
- பல வருட அனுபவமும் செயற்திறனும் சேர்ந்து உருவாக்கப்பட்டவை
- மிக உயர்ந்த தரமும் அழகும் நிறைந்தவை

உங்களுக்கு- உங்கள் அலுவலகத்துக்கு-
உங்கள் வீட்டுப் பாவனைக்கு ஏற்ற அனைத்து உருக்குத் தளபாடங்கள்

- வாட்ரோப்ஸ் (Wardrobes)
- மேசைகள்
- கபினேட் (Filing Cabinet)
- அலுமாரிகள்
- காசுப்பெட்டிகள் (Cash Box)

மற்றும்

- தங்கள் விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் தயாரித்து வழங்கப்படும்.

எமது காட்சி அறைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்

தரமானதும் விலைமதிப்பும் உள்ள உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு நல்குவீர்.

ஒவிஸ் இகுயிப்மென்ற் லிமிட்டெட்
Office Equipment Ltd.

இவை அலுவலகம்:-
45, பிரப்பம்குளம் வீதி,
(off K. K. S. Road,)
யாழ்ப்பாணம்.
(மனோகரா சந்தியிலிருந்து 100 யார்) (இ–5954)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி
G. C. E O/L பரீட்சையில் விசேட சித்திகள் பெற வேண்டுமா!
ஓர் அரிய சந்தர்ப்பம்

O/L Dec. 88

முழுநேர வகுப்புகள்
8.30 a.m. - 1.30 p.m.

ஆரம்பம்: 28 - 7 - 88

யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்கள்

விஞ்ஞானம் - திரு. செல்வவடிவேல்
கணிதம் - திரு. தயாபரன்
சமூகக்கல்வி, வர்த்தகம் - திரு. K. S. முத்துலிங்கம்
தமிழ் - திரு. பொன் செல்வராசா
ஆங்கிலம் - திரு. நைல்ஸ் (ராஜநாதன்)
சுகாதாரம், சமயம் - செல்வி. P. அருணா

விபரங்களுக்கு:
பொறுப்பாளர் K. S. முத்துலிங்கம்

அஸ்ரன் இன்ஸ்ரியூட்
101/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிச்சருகாமையில்)
(C.5904)

Jaffna College
Institute of Technology
Vaddukoddai.

VACANCY

Applications are invited from suitable qualified candidates for the following post.

LIBRARIAN

QUALIFICATION:

Preferably Graduate of a recognised University with a pass in the Intermediate Examination in Library and Information Science possessing experience in Library work.

Salary between Rs. 1400/- — 2000/- per month.

Apply with full Bio-Data to the Director, Jaffna College Institute of Technology, Vaddukoddai — on or before 15 - 08 - 1988.

—DIRECTOR

(C 5928)

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும்
வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

கம்பியூட்டர் கல்வி

Computer Programming in Basic Language
ஆரம்பம் : 3 - 8 - 88
திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்
பயிற்சிக்காலம் : 40 நாள்
கட்டணம் : ரூபா 750/-
(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
கூடிய நேர செய்முறைப் பயிற்சி
AMSTRAD (MICRO COMPUTER), E G 2000 (P C), COMMODORE
கம்பியூட்டரில் வழங்கப்படும்.
பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC AND COBOL LANGUAGE
பயிற்சிக்காலம்: 6 மாதம்

LECTURERS: S.S.UTHTHAMAN
R.S. SUBJI A. I. D. P. M
(Programmer University Jaffna)

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்யவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 1-8-1988

UNIKCO COMPUTER CENTRE
No: 5, மின்சார நிலைய வீதி,
2, ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோர் அருகாமை)
(C 5844)

திருமலை மாவட்டத்தில்

60 பட்டதாரி ஆசிரியர்கள் சம்பள உயர்வின்றி பாதிப்பு

திருகோணமலை ஜூலை 27

திருகோணமலையில் 1985ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சுமார் 60 பட்டதாரி ஆசிரியர்களுக்கு இதுவரை காலமும் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர்களை நியமிக்கும் போது என்ன சம்பளம் கொடுக்கப்பட்டதோ அதே சம்பளத்தையே இதுவரை பெற்று வருகின்றனர்.

மற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள மீளாய்வு, வருடாந்த சம்பள உயர்வு ஆகியன வழங்கப்படவில்லை.

இதுவரை காலமும் இவர்களுக்கு நியமனக் கடிதங்கள்கூட வழங்கப்படவில்லையாம்.

ஆசிரியர்களுக்கென்று எத்தனையோ தொழிற் சங்கங்கள் இருந்தும் எந்தவொரு சங்கமாவது இது தொடர்பான நடவடிக்கை எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். (இ-150)

கல்விப் பகுதிக்கு புதிய கட்டிடம்

தாளையடி, ஜூலை 27

கிளிநொச்சி பிராந்திய கல்வித்திணைக்களத்திற்கு புதிய கட்டடம் ஒன்று கட்டப்படவிருப்பதாகத் அறிய வருகிறது.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் அந்த புதிய கட்டடம் கட்டப்படலாமென்றும் தெரிய வருகின்றது.

தற்போது கல்வித் திணைக்களம் கரடிப்போக்கில் உள்ள நெற் சந்தைப்படுத்தும் சபை கட்டடமொன்றிலேயே இயங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (144)

இனிவரும் நாட்களை விடியலாக மாற்றுவோம்
'கைஸ்' அறிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 27

இன்றைய நாட்கள் கொடூரமாக இருப்பினும், இனிவரும் நாட்கள் விடியலாக மாற்றி அமைப்போம்.

''இருண்ட 83 ஜூலை நினைவாக'' மாணவர் இளைஞர் பொதுமன்றம் (கைஸ்) வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

எங்கள் மண்ணின் தாயக விடிவிற்காக தங்கள் உயிரையே துச்சமென மதித்துப் போராடிய போராளிகள் சிங்கள அரசபடையினரால் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடை சித்திரவதைமுகாமில் கொடூரமாகக்கொலை செய்யப்பட்ட ஐந்தாவது வருடம் இன்று.

83இன்இருண்ட ஜூலையில் 25, 27ஆம் திகதிகளில் சிறிலங்கா கொலைவெறியரால் 53 தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டனர். அவர்கள் சடந்துவந்த எமது லட்சியங்கள் இடைநடுவில் நின்றுலும் தொடர்ந்து செல்ல நாம் தயாராகுவோம்.

எங்கள் மண்ணில் இன்னமும் ரண வெள்ளத்திற்குத் தடை காட்டியதாகத் தெரியவில்லை. ஆண்டாண்டு காலமாகத் தமிழ்பேசும் மக்கள், பகடைக் காய்களாக நசர்த்தப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றனர். எங்கள் மண்ணின் விடிவு, விடிவெள்ளியாகவே பிரகாசித்துக் கொண்டு இருக்கின்றது. மலர்ந்ததாகத் தெரியவில்லை.

நாங்கள் இதுவரை காலமும் பட்ட துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் எப்போதாவது ஓர் நாள் தீர்க்கமான பதில் கிடைத்துத்தான் ஆக வேண்டும்.

பேச்சுவார்த்தைகளும், ஒப்பந்தங்களும் மலிந்துபோன நமது மண்ணில் அமைதிஎன்பதற்கு அத்திவாரங்கூட இடம் பெறுமல் உள்ளது. இந்த மண்ணில் நிரந்தர விடிவு ஒன்றிற்காக ஏங்கிக் கொள்ளும் மக்களுக்குஎப்போது நிரந்தரமான அமைதி கிடைக்கப்போகின்றதோ?

நமக்கென்ற மண்ணும், வாழ்க்கையும் அமையும் வரை எங்கள் போராட்ட உணர்வுகளும், உணர்ச்சிகளும் ஓயப்போவதில்லை. மாறுக நாளத்திலிருந்து நாடியாக எங்கள் போராட்ட செயற்திறன் மாற்றமடையும்.

இன்றைய நாட்கள் கொடூரமாயிருப்பினும், இனிவரும் நாட்களை விடியலாக மாற்றி அமைத்திடுவோமென மரணித்த ஈழவிடுதலைப் போராளிகளினதும் ஏனையோரதும் மேலாக ஆணையிடுவோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ)

சிவனடியார்களை ஒன்று சேர்க்கும் பாதயாத்திரை
ஆரம்ப வைபவத்தில் உரை

சாவகச்சேரி, ஜூலை 27

இறைவனது நாமங்களைத் தொடர்ந்து ஜெபிக்கவும், சிவனடியார்களை ஒன்று சேர்க்கவும் தென்மராட்சியில் உள்ள 208 திருத்தலங்களை இணைக்கவும் தென்மராட்சி திவ்யஜீவன சங்கம் ஏற்பாடு செய்துள்ள 14 நாள் திருத்தல பாதயாத்திரை பயன்படுகின்றது. இதற்குத் தலைமை வகித்துச் செல்லும் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அனைவரின் பாராட்டுக்கும் உரியவர்.

சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கே. ஜெகதீஸ்வரக்குருக்கள், செருக்கல் பிள்ளையார் கோவிலில் இருந்து ஆரம்பமான திருத்தலப் பாதயாத்திரையின்போது ஆசி உரை வழங்குகையில் மேற்கண்டவாறு கூறினார்.

தலைவர் திரு. நா. முத்தையா உரையாற்றுகையில், ''இறை வழிபாட்டுணர்வை பரவலாக வளர்க்க பாதயாத்திரை உதவும்.''

''நாமஜெபம் செய்து திருமுறைகளை ஓதும் போது அமங்கல ஒலிகள் அகன்று அருள் ஒலிகள் நம்மைச் சூழ்கின்றன. பிரார்த்தனைமூலம் நாம் பூரண சரணாகதி அடைகின்றோம். அரன் நாமமே சூழ்ந்து வையகம் துயர் நீங்கும். கடந்த இரு வருடங்களிலும் சைவப்பெருமக்கள் காட்டிய ஆர்வம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.''

''சில ஆலயங்களில் மந்திர, திருமுறை ஒலிகளே கேட்பதில்லை என்பதும் கவலையுடன் குறிப்பிடக்கூடியதாகும்'' என்றார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம் பிள்ளை, நகரமன்ற ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா ஆகியோரும் ஆசியுரைகள் வழங்கினர்.

நூற்றுக்கும் அதிகமான சிவனடியார்கள் பங்குபற்றிச் சென்ற இந்த யாத்திரைக் கோஷ்டியை வீடுகள் தோறும் பூரணகும்பம், குத்துவிளக்கேற்றி மக்கள் வரவேற்றனர். (இ-31)

பட்டத்துக்காக மட்டுமன்றி சேவைக்காகவுமே பாராட்டு விழா
வைத்தீஸ்வரா அதிபருக்கு புகழாரம்

கொக்குவில் ஜூலை 27

இங்கு கடமையாற்றிய சில அதிபர்களின் காலத்தில் இக்கல்லூரி வளர்ச்சி குன்றியது. இதனைக் கண்டு கவலை அடைந்த இக் கல்லூரி பழைய மாணவர்கள் இக் கல்லூரிக்கு ஒரு சிறந்த நிரந்தர அதிபர் வேண்டுமென பல இடங்களிலும் தேடி தற்போதைய அதிபர் திரு சிவசரவணபவன் அவர்களைக் கொண்டு வந்தனர். இன்றைய இப் பாராட்டுவிழா அவர் முதுகலைமாணிப் பட்டம் பெற்றமைக்காக மட்டுமல்ல அவர் இங்கு அதிபராக ஆற்றிவரும் சேவைக்கும் ஆகும்.

திரு. டபிள்யூ எஸ். செந்தில்நாதன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் பிரம்மஸ்ரீ சிவசரவணபவன் (சிற்பி) அவர்கள் யாழ் பல்கலைக்கழக கல்வியியற் புலத்தின் முதுகலை மாணிப்பட்டம் பெற்றதைப் பாராட்டி யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர் மன்றம் பாராட்டு விழா ஒன்றை நடத்தியது.

வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு தலைமைவகித்துப் பேசுகையில் திரு. செந்தில்நாதன் மேலும் தெரிவித்ததாவது-

இன்றைய தலைமுறையினரிடையே பல குழப்ப நிலைக்குக் காரணம் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள்-மாணவர்களிடையே நெருங்கிய தொடர்பின்மை ஆகியவையே.

இங்கிலாந்தில் பாடசாலைகளில் வகுப்பு ரீதியாக ஒவ்வோர் தினத்திலும் பெற்றோர் தின விழாக்கள் நடைபெறுகின்றன. இத்தினங்களில் பிள்ளைகள் பற்றி ஆசிரியர்களும், பெற்றோர்களும் கலந்துரையாடுகின்றனர். இதுநல்ல பயன் அளித்து வருகின்றது. இப்படி அவர் கூறினார்.

உப அதிபர் திரு எஸ். இராசதுரை தமது பாராட்டுரையில் மதுரமானபேச்சு, மயக்குகின்ற சிரிப்பு, சற்பனைத்திறன், எழுத்தாற்றல் இவை அனைத்தும் ஒன்று சேரப் பெற்றவர் சிற்பி எனக் கூறினார்.

அவர் எம். ஏ பட்டம் பெற்றமைக்காக மட்டுமல்ல நம்மத்தியில் வாழும் ஓர் சிறந்த சிருஷ்டிகர்த்தா என்பதாலும் பாராட்டுவதாகச் கூறி அவராற்றிய பல இலக்கியப் பணிகளையும் வரிசைப்படுத்திக் கூறினார்.

வித்தியாலய ஆசிரியரும், பழைய மாணவரும் சேவைக்கால ஆலோசகருமான ஜனாப் எம்.எஸ். [illegible] தாம் உயர்ந்தது போல் மற்றவர்களும் உயர வேண்டும் என்ற நோக்குடன் சிற்பிஐயா செயலாற்றுகிறார் என்றார்.

யாழ் மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் கூறியதாவது.-

திரு சிவசரவணபவன் அவர்கள் அடக்கப்பட்ட நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட பாடசாலைகளின் உயர்ச்சிக்காகப் பாடுபட்டவர்.

பின் தங்கிய வசதியும் வாய்ப்பும் குறைந்த பாடசாலைகளில் வசதியும், வாய்ப்பும், குறைந்த பிள்ளைகளுக்குக் கற்பித்து முன்னேற்றம் காணச்செய்தவர்; கற்பனை வளம்மிக்கவர்; கற்பனை என்பது மனதில் திட்டமிடல். உருவாகிய கற்பனைகளை செயற்படுத்தும்போது தான் அபிவிருத்தி ஏற்படுகின்றது.

அந்த வகையில் பல முன்னோக்க செயல்களை செய்வதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

சிற்பி அவர்கள் எழுத்துலக அஞ்ஞாதவாசம் புரியாது நவசிற்பியாக ஆக்கபூர்வமான பல இலக்கியப் படைப்புக்களை தொடர்ந்து உருவாக்க முன்வரவேண்டுமென இலங்கையிலுள்ள தமிழ் சமூகத்தின் சார்பில் உருக்கமான ஓர் வேண்டுகோளையும் பிரதம கல்வி அதிகாரி விடுத்தார். (இ-69)

DIPLOMA IN PHARMACY
புதிய பாமஸி பயிற்சி நெறி
ஆரம்பம் 30 - 07 - 1988
உங்கள் பதிவுகட்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St.Peters Lane,
JAFFNA.
(C 5880)

V.J.S. Express
யாழ் / கொழும்பு / யாழ்.
சொகுசு பஸ் சேவை

பிரயாணிகளின் சௌகரியம் கருதி பின்வரும் முகவரிகளில் எமது டிக்கட்டுக்களை பதிவு செய்து கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரயாணச் சீட்டுக்கள் பதிவு செய்யும் இடங்கள்:

யாழ்ப்பாணம்:
லங்கா பில்லிங் ஸ்ரேசன்
Lanka Filling Station
113, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

Laxsiva Sales Purchase Ltd.
எரிபொருள் நிரப்பு நிலையம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ரேயல் பார்மஸி
156, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கொழும்பு:
V. J. S. என்டர்பிரைஸ்
240, காலி வீதி, வெள்ளவத்தை-6
Tel. 581831

ஸ்ரீ நாகை இன்
Sri Nagaih Inn
176, சென்ட்ரல் வீதி, கொழும்பு - 12
Tel. 23597

கொழும்பு தலைமைக் காரியாலயம்
41, விவேகானந்தா வீதி கொழும்பு - 6
தொலைபேசி: 500748 - 501341

யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலயம்
113, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(C 5931)

இதோ!
உங்கள் பிரபல்ய போஷாக்கு நிறைந்த

லீடா

முழு ஆடைப்பால்மா

வசதியான பக்கட்களில்

விநியோகஸ்தர்கள்,
மில்லர்ஸ் லிமிடெட்
த. பெ. இல: 100,
கொழும்பு - 1.

400 கிராம் பககட் ரூ. 29/90
1 கி. கிராம் பக்கட் ரூ. 85/=
2 கி. கிராம் பக்கட் ரூ. 162/=

லீடா இப்பொழுது ஓர்குடும்பத்தின் அங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூ. 4,000 நிவாரணம் பெற விவசாயக் கார்ட் இல்லை

விவசாயிகள் /பலர் அவதி

கோப்பாய், ஜூலை27
சமீபத்திய சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பலர் விவசாயக் கார்ட் இன்றி பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

உருளைக்கிழங்கு பயிர் செய்யும் விவசாயிகளிடமே பெரும்பாலும் தற்போது விவசாயக் கார்ட்டுகள் இருக்கின்றன.

ஏனைய விவசாயிகள் பலரிடம் இவ்வாறான கார்ட்டுகள்கிடையாது.

இதனால் வாழை, மிளகாய் பயிரிடுவோர் பலர் தமக்கு நிவாரணம் கிடைக்காது போகலாம் என்று அஞ்சுகின்றனர்.

பாதிக்கப்பட்ட முழு நேர விவசாயிகளுக்கு ரூ. 4000 நிவாரணம் வழங்கப்பட இருப்பது தெரிந்ததே. (இ-72)

அச்சுவேலியில் கடையில் களவு

அச்சுவேலி, ஜூலை 27
அச்சுவேலி பஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள ஒரு வியாபார நிலையத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு 40 ஆயிரம்ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப் பட்டுள்ளன.

இரவு நடைபெற்ற இச்சம்பவத்தில் சேலைகள், சாரங்கள் உட்பட வீட்டுப் பாவனைக்குரிய ஆடம்பரப் பொருள்களும் களவாடப்பட்டுள்ளன.

இதுபற்றி வியாபார நிலைய உரிமையாளர் பொலீஸில் புகார் செய்துள்ளார். (இ - 11)

வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை27
சாரதா ஐக்கிய நாணயச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 3மணி அளவில் ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சர்வோதயம் உணவுப்பொருள் விநியோகம்

அச்சுவேலி, ஜூலை 27
சுன்னாகம் காந்திரூபன் சனசமூக நிலையப்பகுதியில் பாதிப்புகளுக்கு உள்ளாகிய குடும்பங்களுக்கு சர்வோதய இயக்கம் உணவுப் பொருள்களை வழங்கியது. 150 குடும்பங்கள் இதனால் நன்மை அடைந்தன.

யாழ். சர்வோதயப் பிரதிநிதிகள் நேரடியாக விஜயம் செய்து காந்திரூபன் சனசமூக நிலையத்தில் வைத்து உணவுப் பொருள்களை குடும்ப அடிப்படையில் வழங்கினர். (இ-11)

கொடிகாமம் வர்த்தகர் சங்கம்

கொடிகாமம் ஜூலை 27
கொடிகாமம் வர்த்தகர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் சங்க நிலையத்தில் தலைவர் திரு. இ. சற்குணராசா தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகள்.

தலைவர் திரு. கே. எஸ். கயிலாயபிள்ளை உபதலைவர் திரு. இ. சற்குணராசா, செயலாளர் திரு. எஸ். சங்கரப்பிள்ளை பொருளாளர் திரு. என். சிவசுப்பிரமணியம் கணக்குப்பரிசோதகர் திரு எஸ். அருளுசலம். (இ-75)

தமிழைக் காக்க பாடுபடும் இளைய தலைமுறையினர் பாராட்டப்பட வேண்டும்

தமிழ் தினவிழாவில் உரை

மானிப்பாய், ஜூலை 27
தமிழ்மொழி மிகத் தொன்மை வாய்ந்தது. ஒவ்வொரு பாடசாலைகளிலும் தமிழ் வாழ்த்துக்களை பாடி விழாக்களை ஆரம்பிக்கும் பண்பாட்டை பேண வேண்டும். தமிழ் மொழியை வாழ்த்துவது போன்று, இறுதி வரை தமிழைக் காப்பாற்ற வேண்டுமென பாடுபடும் இளம் தலைமுறையினரையும் பாராட்ட வேண்டும்.

இவ்வாறு வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் யாழ். சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை நூலகக்கட்டடத் திறப்புவிழாவில் பேசிய போது கூறினார்.

மேற்படி பாடசாலையில் நூலகக் கட்டடத்தை திறந்துவைத்தபணிப்பாளர் அங்கு நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் பிரதம விருந்தினராகவும் கலந்துகொண்டார்.

பாடசாலை அதிபர் திரு. சு. துரைசிங்கம் நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்தார்.

சண்டிலிப்பாய், உதவி அரசாங்க அதிபர்செல்வி சாந்தினி சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில்"வேளை உணவை தவறுது நாம் உட்கொள்ளுவதுபோல ஆசிரியர்கள் தரும் அறிவாகிய உணவை தவறுது கற்றுக்கொள்ள வேண்டும்"இன்றைய கல்வித் தேவையை மாணவர்கள் நிறைவு செய்து கொள்ள முயல வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பேராசிரியர் திரு. கே. சண்முகநாதன், மானிப்பாய் பகுதி வட்டார கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன், முன்னாள் பாடசாலை அதிபர் திரு. வி. சிவகுரு, ஆசிரியர் திரு. கே. சுந்தரலிங்கம் உட்பட பலர் இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர். (இ-90)

ஹர்த்தால்

கொடிகாமம், ஜூலை 27
கொடிகாமம் உட்பட தென் மராட்சி கிழக்குப் பகுதிஎங்கும் ஹர்த்தால் தினமான திங்கட்கிழமை பூரண அமைதி நிலவியது. (இ-75)

விக்ரு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L 90
பிரிவு 2
சனி, ஞாயிறு
ஆரம்பம்:- 30- 07- 88
(8 - 00 a.m.)

89 பிரிவு 3
ஆரம்பமாகிவிட்டது

முக்கிய குறிப்பு:-
I. கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் ஒருங்கிணைந்து நடாத்தப்படுகின்றது.
II மாணவர்கள் பிரிவு 2 க்கான அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும்.
(C/5837)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
SPOKEN ENGLISH
with GRAMMAR
by BRITTO
Day Classes
3ஆம் பிரிவு-ஆரம்பம்: 1-8-88
காலை 10 மணி
(C 5932)

யாழ். மாவட்டத்தின் இன்றைய முன்னணி ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து நடாத்தும்
A/L 89-90
கலை, வர்த்தக
WEEKEND CLASSES
ஆரம்பம் 28- 7- 88
பொருளியல் - திரு. லோகசிங்கம் (வடமராட்சி புகழ்)
கணக்கியல் - திரு. ஸ்ரீ
வர்த்தகம் - திரு ஜெயராமன்
அளவையியல் - திரு. விக்கி
இந்துநாகரீகம் - திரு. ஜோதீஸ்வரன்
தமிழ் - பிரபல ஆசிரியர்
விபரங்களுக்கு:
பொறுப்பாளர் K. S. முத்துலிங்கம்
அஸ்ரன் இன்ஸ்ரியூட்
101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கருகாமையில்)
(C. 5903)

போர்முனையில் சேவை செய்த புதுமைப் பெண்

ஹெலனுக்கு பாராட்டு

வடமராட்சி, ஜூலை 27
போர்முனையில் சேவை செய்த புதுமைப் பெண் செல்வி ஹெலன்.

மந்திகை ஆதார வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஹெலனின் சேவைநலன் பாராட்டு விழாவில் பேசுகையில் வைத்திய சாலை உத்தியோகத்தர் திரு. ரி. பரஞ்சோதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:

செல்வி ஹெலன் டாக்டராக இல்லாதுவிட்டாலும் பலராலும் டாக்டராகவே கணிக்கப்பட்டவர்.

அவருக்கு அவரின் சேவைக்காகவாவதுடாக்டர் பட்டம் வழங்கப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா இராணுவக் கெடுபிடி காலம் தொடக்கம் இன்றுவரை மக்களின் துயர் துடைக்கத் துணிந்து தன்னை அர்ப்பணித்து வடமராட்சியில் சேவைசெய்தவர் செல்வி ஹெலன்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வெளியே நடமாட முடியாத காலங்களில் காயம் அடைந்தோரை தனது வாகனத்தில் துணிந்து ஏற்றி தானே யாழ். பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று பலரின் உயிர் காத்த புதுமைப் பெண் அவர்.

இன்று மந்திகை ஆஸ்பத்திரி யாழ். பெரியாஸ்பத்திரிக்கு ஒப்பாக, சத்திர சிகிச்சைக் கருவிகள் எக்ஸ்ரே கதிர் இயக்க இயந்திரம் ஆகியவற்றுடன் திகழ்கின்றது.

அவரின் சேவை இம்மாதத்துடன் முடிந்து அவரின் ஸ்தானத்தின் அழைப்பை ஏற்று பிரஞ்சு நாட்டுக்கு அவர் செல்லவுள்ளார். அவரின் பிரிவு பெரும் இழப்பு ஆகும்.

இப்படி அவர் கூறினார் திரு. ஆர். பாலகிருஷ்ணன் தலைமையில் வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் ரி. பரஞ்சோதி, ஆர். பரமசாமி திருமதி எம். சிவசம்பு, எஸ். குலசேகரம் ஆகியோருடன் சமூகமளில் உள்ள பிரெஞ்சு டாக்டர்களும் உரையாற்றினார்கள்.

செல்வி ஹெலன் நன்றி கூறிவித்துப் பேசுகையில்; தனது சேவைக் காலத்தின்போது சேவை செய்த ஊழியர்களின் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

வடமராட்சி மக்களின் இன்றைய நிலை குறித்து வருத்தமும் தெரிவித்து விடைபெற்றார். (இ-160)

1ஆம் வருட நினைவஞ்சலி

வின்சன்ற் பிரான்சிஸ் ஞானதிபன்

(2ஆவது லெப்டினன் பெரியதம்பா)

அன்னையின் மடியில்: 1969-06-27
தமிழ்த்தாயின் மடியில்: 1987-07-27

உயிர் தந்த நிபமடா!

அன்னையாம் இராக்கினி உனை ஈன்று
அப்பனுடன் வின்சன்ற் குலம் தழைக்க
அக்கணமே வந்த நம் சிரேஷ்டனே நீ
அறுபத்தொன்பதிலே உதித்தாயடா!

இளந் தென்றல் விளையாடும் வெற்றிலை விளை
இளவாலையம் பதித் தோன்றல் வெற்றிவாகாய்
இளநகையோடும் தளிர் மிடுக்கொடும்
இள வேங்கை நீ விழி குளிர வளர்ந்தாயடா!

உற்றுருன் கல்வி வளம் சான முன்னேகையிலே
உன்னரிய சேவையும் தன்னம்பிக்கை அன்பு
உயரிய பண்புளத்தனையும் நிறைந்த
உள்ளப் பாங்கொடு சிருடன் சுற்றுயடா!

எழுத்திலேயும் இல்லியிங்கு நமக்கு சுதந்திரம்
எண்ணிலேயும் தந்திடாரென நின் மனம் கூற
எடுத்தாளுமிலங்கை அரசின் கொடுமை கண்ணுய
எட்டிப் பழகி உறுதியொடு ஆயுதம் ஏந்தினையடா!

ஒழுக்கத்திலும் மனக்கட்டுப்பாட்டிலும்
ஒற்றுமையாய் சகதோழருன் குணம் வாழ்த்த
ஒரு பெரிய தம்பா என்றுனை உரிமை கூற
ஒவ்வாப் படை விரட்டப் போராடினையடா!

தம்பா நின் உடல் உடன் தந்தாய்
தமிழ் மண்ணிற்கு உரமேற்ற
தமிழன்னைக்குப் பூநகரியில் உன் உயிர்
தந்தாய் சுதந்திர வேட்கையூட்ட!

என்றும் இவர் பிரிவால் துயருறும்:
உற்றார், உறவினர், நண்பர்கள்.

" இரக்கமுள்ள இயேசுவே மரித்த விசுவாசிகளுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும் "

(5343)

90-ஆம் நாள் நினைவஞ்சலி

எமது குலத்தை விளங்க வைத்திடும்
குணப்பெருங்குன்றமே!
எங்களது அன்புத் தெய்வமே!
அழகின் இருப்பிடமே!
நீ பூமியில் உதித்து
21 ஆண்டுகள் ஆகவில்லையே!
உமது பேரிழப்பு எங்கள் இதயத்தை
வருத்திக் கொண்டேயிருக்கிறது.
நீ எங்கள் கண் முன் இருந்தாலே
பசி மாறி விடும்.
நீர்வைக் கந்தன் ரதோற்சவத்திலன்று
பிரதிஷ்டை செய்த நின்னை
காலனுருவில் வந்த படுபாவியின்
கொடுஞ்செயலால் அகாலமரணமாகி
அமரத்துவமடைந்தாயே!

ஆ! ஆ! தெய்வமே
இப்படியும் ஒரு செயலா?
மனம் வெதிறதே!
90 நாளாகியும்
எம்மனம் ஏங்கித் தவிக்கிறதே!
என்னே விதியின் செயல்?
நின் ஆன்மா சாந்தியடைய நாமெல்லோரும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் வாடும்
தந்தை, தாய், சகோதரர்,
சகோதரிகள், பெரியப்பா,
பெரியம்மா, பிள்ளைகள்,
சித்தப்பா, சித்தி பிள்ளைகள்,
அத்தை, மாமா, மாமாமார்,
மாமிமார், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
(5324)

செல்வன் சண்முகதாஸ் - விஜயகுமார்
[மாம்பழம்]
மலர்வு: 03-12-1967
சிவபதம்: 30-04-1988

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

1. Saudi Arabia:
சவூதி அரேபியா:

Saudi Operation & Maintenance Company Limited

S. O. M. C.

1. Electrician	—	SR 600
2. Mechanic	—	SR 600
3. A/C. Technician	—	SR 700
4. Electrical Engineer	—	SR 2000
5. Plumber	—	SR 600
6. Drivers	—	SR 600
7. Masons	—	SR 600
8. Carpenters	—	SR 600
9. Eletronic Technician	—	SR 700
10. Telephone Technician	—	SR 600
11. Telephone Operator	—	SR 700
12. Power Plant Operator	—	SR 700
13. Power Plant Mechanic	—	SR 700
14. Power Plant Electrician	—	SR 700
15. Painter	—	SR 600
16. Welder	—	SR 600

Saudi Arabia

Maintenance Workers

1. Work Controler	—	1100 = 100
2. Work Settuler	—	1100 = 100
3. Material Controler	—	800 = 100
4. Have Split Units Technician	—	900 = 100
5. Appliance Technician	—	700 = 100
6. T. V. Repairman	—	700 = 100
7. Carpenter / Locksmith	—	600 = 100
8. Plumper	—	600 = 100
9. Painter	—	500 = 100
10. Jeniter	—	300 = 100
11. H.I. Duty Driver	—	600 = 100
12. Mechanic Helper	—	400 = 100

Age 21 — 47 Year

நேர்முகப் பரீட்சைக்கு

10-8-88 கொழும்பு சென்று
20-8-88 க்குள் பிரயாணம் செய்யலாம்.

யாவரும் ஆங்கில அறிவு திறமையுடையவர்களாகவும், 4 வருட அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

2. Kuwait: குவைற்:

United Shiping Company Cleaners

300 Vacancies - Salary 30 K.D

Age 21 — 48 வரை

1. A. C. மெக்கானிக்	—	60 K.D.
2. மாபிள் கல்லுப்பதிப்போர்	—	60 K.D.
3. பேணிச்சர் காப்பென்ரர்	—	60 K.D.

WITH FOOD ALLOWANCE

FLIGHT: 15-9-88 க்கு முன் பயணம்

மேற்படி விபரம் அறிய உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

T.V. TRAVELS & TOURIST

BROWN ROAD,
(Railway Station Front)
KOKUVIL.

(C 5952)

குடியேற்றப் பிரச்சினை தீரும் வரைக்கும் சிங்கள வாக்காளர் பெயரை நீக்க வேண்டும்

மக்கள் சமூகம் ஒன்று ஒரு தேசிய இனமாகக் கருதப்படுவதற்கு அவர்களுக்கென வரையறுக்கப்பட்ட நிலப் பிரதேசம் வேண்டும். இஸ்ரவேல் உருவாக்கப்படுவதற்கு முன், யூதர்களுக்கு இத்தகையநிலம் இல்லாதிருந்தமையே ''அலைந்து திரியும் யூதர்களை ஒரு தேசிய இனமாக ஏற்க முடியாது'' என்று ரஷ்யத் தலைவர் ஸ்டாலினைக் கூற வைத்தது. சுதந்திரத்திற்கு முனபிருந்தே சிங்களவரின் அரசியல் யுக்தி தமிழர் நிலங்களை— தாயகத்தை – கொள்ளையிட்டு அவர்களை அவர்களின் சொந்த நிலத்திலேயே சிறுபான்மையினராக்கி- முன்பு தென் இலங்கையின் சில பாகங்களில் சிங்களவர் மத்தியில் வாழ்ந்த தமிழர்கள் காலப்போக்கில் சிங்களவராக மாற்றப்பட்டதைப்போல அனைத்து தமிழர்களையும் சிங்களவராக்கி இந்நாட்டை சிங்கள பௌத்தர்களுக்கே உரியதாக்க வேண்டும்என்றநோக்கை அடைவதையே குறியாகக் கொண்டிருந்தது.

சிங்களவர்களின் இந்த யுக்தி கீழ்க் கண்ட வழிவகைகளில் செயற்படுத்தப்பட்டு வருகிறது:-

1 தமிழ் நிலத்திலுள்ள நீர்ப்பாசன திட்டங்களில் ஏனைய ஏழு மாகாணங்களிலும் இருந்து சிங்கள கிராமவாசிகளைக் கொண்டு வந்து குடியமர்த்தல்.

2 தமிழர் தாயகத்திலுள்ள அரசகாணிகளில் வெளியூர் சிங்களவரை வலோத்காரமாக குடியேற ஊக்குவித்தல்.

3 தமிழர் பிரதேசக் கரையோரங்களில் வெளியூர் சிங்கள மீனவரை குடியமர்த்தல்.

4 தமிழர் பகுதியில் நிறுவப்பட்டுள்ள அரச கூட்டு நிறுவனங்களில் வெளியூர் சிங்களவருக்கு வேலை வாய்ப்பளித்து அவர்களைக் குடியமர்த்தல்.

5 தமிழ் நிலத்தில் காடுகளால் மூடப்பட்டுள்ள பௌத்தவிகாரைகளை மீட்டெடுத்து அவற்றைச் சுற்றி சிங்கள பௌத்தரை குடியமர்த்தல்.

தமிழ் மண் பிடிபடலாம்

தமிழ் மண் பிடிபடலத்தின் முக்கிய முனையாக மேலே முதலில் குறிப்பிட்ட நீர்ப்பாசன குடியேற்றத் திட்டங்கள் அமைந்தன. அதனால் இவ்விசயத்தில்தமிழ் அரசியல் வாதிகள் மிகக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் திகதி டட்லி- செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்தானது, இவ்வொப்பந்தம் நிறைவேறியதில் முக்கிய பங்களிப்புச் செய்தவர் தற்போதைய ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன. அவ்வொப்பந்தத்தில் கீழ்க்கண்ட உடன்பாடு இடம்பெற்றது:-

''காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்வரும் காணிகளில் வழங்கப்படும் காணித்துண்டுகளைப் பெறும் உரிமை இலங்கை குடிமக்களுக்கு கிடைக்கக் கூடியதாக காணி அபிவிருத்திச் சட்டம் திருத்தப்படும். குடியேற்றத் திட்டங்களின் கீழ் காணிகள் வழங்கப்படுகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கீழ்க்கண்ட முன்னுரிமைகள் பேணப்படவேண்டும் என்பதை திரு. சேனநாயகா மேலும் ஏற்றுக்கொண்டார்.

(அ) வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் முதற்கண் அம்மாவட்டத்தில் உள்ள காணியற்ற மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

(ஆ) இரண்டாவதாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

(இ) மூன்றாவதாக இலங்கையின் ஏனைய குடிமக்களுக்கு, ஆனால் இவர்களுள் தீவின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் குடிமக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்''.

புள்ளி விபரம்

1965 இல் ஐ. தே கட்சியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தக் கோட்பாடு எவ்வளவு தூரம் ஏற்கப்பட்டு இவ்வொப்பந்தத்தில் இடம்பெற்றிருக்கிறது என்பவை கேள்விக்கு உரியது. ஆனால் எவ்வளவு தூரம் தமிழர் நிலம் சுபளீகரம் செய்யப்பட்டு தமிழர் தாயகம் ஆபத்துக்குள்ளாக்கப் பட்டிருக்கிறது என்பதை அரசாங்க புள்ளி விபரஅறிக்கையே காட்டுகிறது. புள்ளி விபரக்கணக்கு வருமாறு:-

ஆண்டு	மொத்த குடிசனம்	சிங்களவர்	முழுகுடி எண்ணிக்கையில் சிங்களவரின் வீதம்
	வடக்கு மாகாணம்		
1921	374,829	3,795	1
1946	479,572	9,602	2
1981	1 111,468	33,149	3
	கிழக்கு மாகாணம்		
1921	192,821	8,744	4.5
1946	279,112	23,456	8.4
1981	976,475	243,358	24.9

தமிழ் நிலம் சிங்கள குடியேற்றங்களின் மூலம் அபகரிக்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கத்தவறியது ஒப்பந்தத்தின் மிகப் பாரதூரமான குறைபாடாகும். 1948க்கு பின்பு நடைபெற்ற சிங்களக் குடியேற்றங்களைப் படிப்படியாக அகற்றவேண்டும் என்ற தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு இடம் கொடுக்காதது மட்டுமல்ல 1983 ஜூலை கலவரத்திற்குப் பின்பு சிறிலங்கா அரச படைகள் தாக்குதலை ஆரம்பித்த பின் தங்கள் உறைவிடங்களை விட்டு ஆயிரக்கணக்கில் தமிழர்கள் ஓடிய பொழுது நடத்தப்பெற்ற குடியேற்றங்களை அகற்ற இடம்வைக்காதது மட்டுமல்ல — இன்னும் மோசமான நிலை

> ஈழத்தமிழர் பிரச்சினையில் காணி, குடியேற்றம் ஆகியவை மிக முக்கியமானவை அவை குறித்து இலங்கை, இந்திய ஒப்பந்தம் எந்தவிதத்தில் உரிமைகளை வழங்குகிறது என்பது குறித்து இந்தக் கட்டுரையில் ஆராயப்படுகிறது.
>
> அண்மையில் வெளியிடப்பட்ட ''இலங்கையின் இனப் போராட்டம்'' என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி இது.

என்னவெனில் ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பும்கூட குடியேற்றங்கள் நடைபெறுவதைத் தடுக்க ஒப்பந்தத்தில் எந்த வகையான ஏற்பாடும் இல்லை.

1987 ஜூலைக்குப் பின் நடைபெற்ற— இன்றும் திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் நடைபெறும் சிங்களக் [illegible] — தடுத்து நிறுத் [illegible]

க்கு மாகாணங்களில் 1948க்குப்பின் குடியேற்றப்பட்ட சகல சிங்களக் குடியேற்ற வாசிகளினதும் அவர்கள் வழித்தோன்றல்களினதும் பெயர்கள் இம்மாகாணங்களின் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டு அவர்களின் பழைய இடங்களில் அவர்கள் வாக்காளர்களாகப் பதியப்படவேண்டும்.

இதற்கு பக்கசார்பான ஆதரவு ஒரு அமெரிக்கப் பேராசிரியரின் நூலில் கிடைத்துள்ளதை யிட்டு மகிழ்வெய்துகிறோம். லொக் ஹேவின் (Lock Haven) பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் துணைப் பேராசிரியராக இருக்கும் கலாநிதி லோறன்ஸ் ரீ. பா(F)ர்லி (Lawrence T. Farley) அவர்கள் எழுதிய கருத்து கணிப்புகளும் இறைமையும் Plebiscites &Sovereignty என்ற நூலில் பல இடங்களில் கருத்துக் கணிப்புக்கான வாக்காளர் பட்டியல்களின் பல வருடங்களுக்கு முன்னர் குடியிருந்தவர்களின் பெயர்கள் மட்டும் கொண்டு புதிதாகத் தயாரிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையிலேதான் கருத்துக் கணிப்புகள் நடத்தப்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

உதாரணமாக 1935 ல் நடந்த [Sar] கருத்துக் கணிப்புக்கு அப்பிரதேசத்தில் 28-6-1919 இல் குடியிருந்த 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

ஒரு நிலப் பரப்பில் வாழும் நியாயபூர்வமான உரிமை பெற்றவர்களுக்கு அப்பிரதேச நலனை முன்னிட்டு நடத்தப்படும் தேர்தல்களில் வாக்குரிமை வழங்கப்படல் வேண்டுமென்ற அடிப்படையில் 1948-ம் ஆண்டுக்குப்பின் நியாய [illegible] வட-

காக்கும் படைக்கு அதிகாரம் இல்லை.

உதாரணம்

உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மணல் ஆறு என்னும் பகுதியில் வடக்கு கிழக்கு மாகாணங்களைத் துண்டிக்கும் நோக்குடன் 'வெலிஓயா' என்ற சிங்கள பெயருடன் ஒரு பாரிய சிங்களக் குடியேற்றத் திட்டம் 1984 ஆண்டுக்குப்பின் நடைபெற்று வருகிறது. 4000 குடும்பங்கள்வரை குடியேற்றப்பட்டுவிட்டார்கள். இதுபற்றி முல்லைத்தீவு பிரஜைகள் குழுவும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பாரதப் பிரதமருக்கு மகஜர்களை அனுப்பியும் இதுவரை பலன் ஏதும் காணப்படவில்லை,

அசாம் உதாரணத்தை இங்கும் பின்பற்றினால் என்ன?

எனவே சிங்களக் குடியேற்றத்திட்ட பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படும்வரை அசாமில் நடைபெறுவதைப்போல வடக்கு கிழக்கில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் அப் பிரதேசத்தின் பூர்வீக குடிமக்களின் நலன்களுக்கு மாறுபட்டவர் என்ற அடிப்படையிலும் அவர்களுக்கு வாக்குரிமை மறுப்பது நியாயமானதே.

ஒப்பந்தத்தின் 2 15ம் பந்தியின் படி 1986 மே 4-ம் திகதி முதல் 1986 டிசம்பர்19-ம்திகதிவரை விவாதிக்கப்பட்ட திட்டங்களுக்கு சம்மதிப்பது நிபந்தனையாகக் கொள்ளப்பட்டுள்ளது, அத்துடன்மேற்கண்ட காலத்தில்இறுதியாக்கப்படாத விபரங்கள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் திகதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள் இலங்கை இந்திய அரசுகளுக்கிடையே பேசித் தீர்வு காணப்படும். இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட 'வரைவுப் பிரேரணைகள் (30. 8. 85 இலிருந்து 19.12 86 வரை) என்ற வெளியீடு இணக்க நிபந்தனைகள் சிலவற்றைக் குறிக்கிறது. இவை ஸ்ரீலங்கா குழுவிற்கும் இந்திய வெளி விவகார அமைச்சு அதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற (பேச்சுக்களின் போது உருவானவை.

தமிழர் பாதிப்பு

1985 செப்டெம்பர் 10-ம் திகதிக்கும் 13-ம் திகதிக்கும் இடையே ஒத்துக்கொள்ளப்பட்ட பிரேரணைகளின் தமிழர்களுக்கு சார்பான ஒன்றிரண்டு விடயங்கள் பிந்திய பேச்சுவார்த்தைகளின் போது விடுபட்டுள்ளன. இத்தவறு வேண்டுமென்றே செய்யப்பட்டதா அல்லது அசஸ்தமாக கவலையீனமாக விடப்பட்டதா என்று சம்பந்தப்படாதவர்களால் சொல்ல முடியாது. ஆனால் இதனால் தமிழர்களுக்கே பாதிப்பு என்று மட்டும் கூற முடியும்.

இப்பேச்சுக்களின் போதுதான் ஸ்ரீலங்கா தூதுக்குழு காணி வழங்கல்களில் இனவாரியான ஒதுக்கீடு பற்றியும்— பாரிய நீர்ப்பாசன திட்டங்கள் சிறு நீர்ப்பாசன திட்டங்கள் என்ற வேறுபாடு உருவாக்கியும் கருத்துக்களை முன்வைத்துள்ளது. இக் கருத்துக்கள் டட்லி- செல்வநாயகம் ஒப்பந்தத்தை மீறுவதானது. எமது சார்பில் பேசப் புகுந்து விட்டவர்கள் அந்நேரம் ஏன் யூ. என். பி. அரசை அக்கட்சியே ஏற்றுக்கொண்டு அதன் தலைவர் திரு. டட்லி சேனநாயகா தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறவிடாது பார்க்கவில்லை.

தமிழர்களைப் பொறுத்தளவில் காணிப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்திய அரசு 1986 - டிசம்பர் 19-ல் நடைபெற்ற பங்களூர் பேச்சுவார்த்தைகளின்போது கூட இப்பிரச்சினையை மீண்டும் எழுப்பியிருக்கிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அரசின் வெளியீட்டில் (தமிழ்ப் பகுதிப் பக்கம் 39) மாகாணசபைகள் பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது. இதன்படிக்கு 30-8-85 தேதிய இணக்க சட்டமைப்புக்கான பின்னிணைப்பு I லும் பெரும் படியாக இந்திய யாப்பின் ஏழாவது அட்டவணையின் II-ம் III-ம் பட்டியல்களில் உள்ள பதிவுகளில் உள்ள விடயங்கள் மாகாணசபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கஞ் செய்யப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

மாகாணசபை சட்டத்தில்

காணி விடயம் மாகாணசபை நிரலில் (நிரல் 1) 26ஆம் விடயமாக இடம் பெறுகிறது. (பக்சம் 27 — தமிழ்) அது வருமாறு கூறுகிறது:-

காணி—பின்னிணைப்பு (11) இல் தரப்பட்டுள்ள அளவுக்கு காணி, அதாவது காணியின் மீதான உரிமைகள், காணிஆட்சி, காணியைக் கைமாற்றுதலும் பராதீனப்படுத்தலும், காணிப்பயன்பாடு, காணிக் குடியிருப்பும் காணிச்சீர்திருத்தமும்,

பின்னிணைப்பு மிக விரிவாகவுள்ளது. ஆயினும் வரைவு பிரேரணைகளின்றும் (பக்கம் 107 — தமிழ்) அரசமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தப்பிரேரணை பல்வேறு வகையில் மாறுபாடுடைய தாயிருக்கிறது. இத்தகைய வேறுபாடுகள் கபடத்தனமாக புகுத்தப்பட்டவையா?

வரைவு பிரேரணைகளின்றும் மாற்றப்பட்டவை வருமாறு:-

(1) பின்னிணைப்பு IIன் தொடக்கப் பந்தியில் கூறிய காணி விடயம் மாகாணசபைகளுக்கு கீழ்க்கண்ட பிரேரணைகளுக்கமைய பரவலாக்கப்படும் என்ற அரசியல் யாப்பின் 13ஆம் திருத்தத்தில் இடம்பெறவில்லை. பதிலாக கீழ்க்கண்டபடியுள்ளது;

''அரச காணி தொடர்ந்தும் குடியரசிடமே இருக்கும். விதி 33 (b)க்கும் ஏனைய எழுத்திலான சட்டங்களுக்கும் அமைய இது கையாளப்படலாம் மேலே சொன்னதற்கமைவாகவும்கீழ்க்காணும் ஏற்பாட்டுக்கு அமைவாகவும் காணி மாகாணசபை விடயமாக இருக்கும்.''

அனைத்து அரச காணிகளும் குடியரசிடம் இருக்க வேண்டும் என்ற கருத்தை இந்திய அரசு ஏற்றிருக்கவில்லை. பங்களூர் பேச்சுவார்த்தைகளின் போது இலங்கைக் குழுவினருக்கும் தமிழ் குழுவினருக்குமிடையேயிருந்த வேறுபாடுகளை தீர்க்க மூன்று மாற்றுத் திட்டங்களை இந்தியா (7ஆம் பக்கம் பார்க்க)

வெஜிமைட்
முழுமையான குடும்பத்துக்கேற்ற ஊட்டபானம்

விட்டமின் 'பீ' உடனுன ஈஸ்ட் சாறு பாலுடன் கலந்து சாப்பிட அருமையானதாகவும் சூடான பானமாக புகழ்பெற்றும் விழங்குகிறது.

விலை 29/75 தொடக்கம

விநியோகஸ்தர்கள்,
மில்லர்ஸ் லிமிடெட்
த. பெ. இல: 100,
கொழும்பு - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்படை வேலைகளுக்கு மத்தியில் சிறப்பாக நடத்தப்பட்ட போட்டி

கோப்பாய், ஜூலை 27

ஒப்படை வேலைகளுக்கு மத்தியில் மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து இந்த இல்ல விளையாட்டுப் போட்டியை மிகச் சிறப்பாக நடத்தி முடித்துள்ளனர்.

கைதடி கொத்தணி அமைப்புக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் உரையாற்றிய கொத்தணி அதிபர் மு. கணேசலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் விளையாட்டுப் போட்டியில் சிவப்பு இல்லம் முதலாம் இடத்தையும் இரண்டாம், மூன்றும் இடங்களை முறையே பச்சை, மஞ்சள் இல்லங்களும் பெற்றுக் கொண்டன.

வெற்றி பெற்றவர்களுக்கு வட்டாரக்கல்வி அதிகாரி க. தங்கராஜா பரிசில்களை வழங்கினார்.

இவ் விளையாட்டுப் போட்டியில் கைதடி கொத்தணி அமைப்புக்கு உட்பட்ட பாடசாலைகள் மூன்று இல்லங்களாகப் பிரிந்து பங்கெடுத்துக் கொண்டன.

காரைநகர் மேற்கு வீதி அவல நிலை நீடிக்கிறது

கல் பறிக்கப்பட்டும் வேலை நடைபெறவில்லை

காரைநகர், ஜூலை 27

காரைநகர் மேற்குவீதி மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது.

வீதியைத் திருத்துவதற்காக கற்கள் வீதியின் அருகில் பறிக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் வேலைகள் ஆரம்பமாகவில்லை.

இதனால் பாதசாரிகள் மிகவும் கஸ்டப்படுகின்றனர்.

வாகனங்கள் சைக்கிள்கள் செல்ல முடியாத அவலநிலை இவ் வீதியில் இருந்து வருகின்றது.

மழை காலமும் ஆரம்பித்து விட்டால் இந்த வீதியின் நிலைமை இன்னும் மோசமாகிவிடும் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (இ-73)

இலத்திரனியல் கல்விப் பாசறை

பருத்தித்துறை, ஜூலை 27

இலத்திரனியல் கல்விப்பாசறை ஒன்று பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

ஆண்டு 11இல் விஞ்ஞானம் கற்பிக்கும் பருத்தித்துறை, உடுப்பிட்டி கல்விவலய விஞ்ஞான ஆசிரியர்களுக்கான இந்த இலத்திரனியல் கல்விப் பாசறையை விஞ்ஞானசேவை கால கல்வி ஆலோசகர் திரு. எஸ். சிவசிதம்பரமும், தொழில்நுட்பக் கல்வி ஆலோசகர் திரு. என். வைத்தியானந்தமும் கூட்டாக நடத்தினர். இறுதியாகப் பாசறையில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களை விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. எஸ். சர்மா வழங்கினார். (இ - 118)

பூசகர் வீட்டில் கொள்ளை

பண்டத்தரிப்பு ஜூலை 27

நவாலி தம்பனை மாரியம்மன் ஆலய பூசகர் வீட்டில் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டன.

ஊரடங்கு நேரத்தில் வீட்டினுள் ஆயுதபாணிகளாக உட்புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த பூசகரின் மனைவி மகள் இருவரது நகைகள் 17 பவுணை சூறையாடிச் சென்றனர்.

தலையணை, மெத்தை அனைத்தையும் வெட்டியும் கிழித்துமே அவர்கள் இவற்றைத் தேடி எடுத்தனர். (இ - 120)

கொள்ளை

புதுக்குடியிருப்பு ஜூலை 27

முரசுமோட்டைக் கிராமத்தில் உள்ள இரண்டு வீடுகள் இனந்தெரியாதோரால் கொள்ளை அடிக்கப்பட்டன. (இ - 126)

விளையாட்டரங்கு

யாழ் மாநகர சன சமூக நிலையங்களிடையிலான போட்டிகள் இறுதிக் கட்டத்தில்

யாழ்ப்பாணம் ஜூலை 27

யாழ் மாநகர சன சமூக நிலையங்களின் சமாசம் யாழ் மாநகர சன சமூக நிலையங்களிடையே நடத்தும் 1988 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுச் சுற்றுப் போட்டிகள் இம்மாதம் 2 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

யாழ் மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் 57 சன சமூக நிலையங்கள் இச்சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்கின்றன.

இம்மாதம் 31 ஆம் திகதிவரை நடைபெறும் இந்த வருடாந்த சுற்று விளையாட்டுப் போட்டிகள் 21 மைதானங்களில் நடைபெறுகின்றன.

7 பேர் கொண்ட 12 ஓவர் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி, 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி, 6 பேர் கொண்ட தாச்சிப் போட்டி, ஆகிய விளையாட்டுக்கள் இப்போட்டிகளில் இடம்பெறுகின்றன.

இச்சமாசத்தின் செயலாளர் திரு இ. தவகோபால், விளையாட்டுக் குழுச் செயலாளர் திரு எஸ். நவரத்தினம் ஆகியோர் இப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். (இ - 167)

கொக்குவில் அணிவெற்றி; மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில்

யாழ்ப்பாணம் ஜூலை 27

தெல்லிப்பளை கிருஸ் கொப்பர்ஸ் அணிக்கெதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி வெற்றி பெற்றது.

அண்மையில் தெல்லிப்பளைமகாஜன கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி ஒதுக்கப்பட்ட 30 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.

என். பாலக்குமார் 43, எஸ். துஸ்யந்தன் ஆட்டமிழக்காமல் 18, கே. விஸ்வநாத் 17, கே. சி. சதிஸ்குமார் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

கிருபாகரன் 3, சுபதாஸ் 2, சிறிதரன் 2, விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கிருஸ் கொப்பர்ஸ் அணி 29 2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

தர்மராஜா 18, சிராளன் 14, ரூகன் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

பி. கணேஸ்குமார் 3, எஸ். துஸ்யந்தன் 2, எஸ். கோகுலன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (க)

புங்குடுதீவில் உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம் ஜூலை 27

புங்குடுதீவு - ஊரதீவு சனசமூக நிலையத்தின் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் "நொக் அவுட்" முறையிலான உதைபந்தாட்டப்போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறும்.

அமரர் பெரியதம்பி ஆறுமுகம் ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்துக்காக இப்போட்டி நடத்தப்படுகிறது.

பொன் சபாரெத்தினம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில் புங்குடுதீவு விளையாட்டுக் கழகங்கள் மட்டும் பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. சடாட்சர சண்முகதாஸ், புங்குடுதீவு பாணவிடை சிவன் தேவஸ்தானத் தலைவர் டாக்டர் ஆ. பேரின்பநாதன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

புங்குடுதீவு உப அலுவலக அ. அ உத்தியோயோகஸ்தர் திரு. பொன். வைரமுத்து யாழ் கமலாம்பிகை வித்தியாலய ஆசிரியர் திரு. க. சிவப்புத்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்

ஜெ லி. ஸ்ரார் விளையாட்டுக்கழக தலைவர் திரு, எம். வசந்தகுலசிங்கம் தலைமையில் போட்டிகள் நடைபெறும். (இ-ச)

கரைத்துறைப்பற்று பிரதேச சபை, பொது அறிவித்தல் புதிய மின் கட்டணம்

01-01-88ஆம் திகதி தொடக்கம் மின்சக்தி எரிபொருள் அமைச்சின் பணிப்பின் பிரகாரம் முல்லைத்தீவு, முள்ளியவளைப் பிரதேசத்தில் புதிய விகிதாசாரப்படி மின் கட்டணங்கள் அறவிடப்படும் எனப் பொதுமக்களுக்கும் மின்நுகர்வோருக்கும் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது. எனவே இவ்வுயர்ச்சியினைக் கருத்திற் கொண்டு மின்பாவனையாளர்கள் தங்கள் மின் நுகர்ச்சியை வீண்விரயம் செய்யாமல் கட்டுப்பாட்டுடனும், அளவுடனும் உபயோகித்துப் பண விரயங்களைக் கட்டுப்படுத்துமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

(1) வீட்டுப் பாவனைக்குரிய இறுப்புக் கட்டணம்

(i) இந்த இறுப்பனவு தனியார் வசிப்பிடங்களில் மின்சாரத்தை வீட்டுப் பாவனைக்காகப் பாவிப்பவர்களுக்கும் (ii) அப்படியான வீடுகளில் 25%க்கு மேற்படாத இடப்பரப்பினை (ஆகக்கூடியது 400 சதுரஅடி) ஏதும் வியாபாரம் அல்லது தொழில் நோக்கத்திற்காகப் பாவிப்போருக்கும் பொருந்தும்.

(அ) மாதாந்த நிலையான கட்டணம் .... ரூபா. 5/-ம்
(ஆ) 1-10 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு .... -/75 சதமும்
(இ) 11-100 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு .... ரூபா. 1/25ம்
(ஈ) 101-450 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு .... ரூபா. 2/25ம் அத்துடன் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் எரிபொருட் சிராக்கல் கட்டணமும்.
(உ) 450 அலகுகளுக்கு மேல், அலகொன்றுக்கு ரூபா. 2/50 ம் அத்துடன் எரிபொருட் சிராக்கல் கட்டணமும் அறவிடப்படும்.

மேலும்

(ii) வியாபார நோக்கத்திற்காக அல்லது தொழில் நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் இடப்பரப்பிற்காக 25% மேலதிகக் கட்டணம் கீழ்வரும் விகிதாசாரப்படி அறவிடப்படும்.

200 சதுரஅடி வரையும் .... ரூபா. 30/-
200 — 300 சதுர அடி வரையும் .... ரூபா. 40/-
300 — 400 சதுர அடி வரையும் .... ரூபா. 50/-

(2) சமய சம்பந்தமான இடங்கள் அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்கான இறுப்பு

இவை பகிரங்க வணக்கத்தலங்கள். இத்தலங்களுக்குள் அல்லது இத்துடன் சேர்ந்துள்ள இடங்களிலுள்ள பூசகரின் வசிப்பிடம், சமூகசேவைப் பணிப்பாளரினால் சான்றிதழ் வழங்கப்பட்ட தர்மஸ்தாபனங்கள், முதியோர் அனாதை மடங்கள், வலது குறைந்தோர் விடுதிகள் போன்றவற்றுக்கான இறுப்பாகும்.

(அ) மாதாந்த நிலையான கட்டணம் .... ரூபா. 5/-ம்
(ஆ) முதல் 150 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ...... -/75 சதமும்
(இ) 150க்கு மேற்பட்ட அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ... ரூ. 2/-ம் எரிபொருள் சிராக்கற் கட்டணமும் அறவிடப்படும்,

அல்லது

ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தர்மஸ்தாபனங்கள், சமய வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றுக்கான 1-3-85ஆந் திகதி தொடக்கம் மீளாய்வு செய்யப்பட்ட இறுப்பின் பிரகாரம் வரையறுக்கப்படாமல் இச்சலுகையைப் பெற்று வந்தவர்களுக்கு 1987ஆம் ஆண்டின் சராசரி மாதாந்த நுகர்ச்சியின் அலகுகளின் அலகொன்றிற்கு சதம் -/75ம் (எரிபொருள் கட்டணம் விலக்கப்பட்டுள்ளது) இச் சராசரிக்கு மேற்பட்ட அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா, 2/-ம் அதற்கான எரிபொருட் சிராக்கல் கட்டணமும் விதிக்கப்படும்.

(3) வீதிவெளிச்சம்

பிரதேச சபையால் ஈடு செய்யப்படும்.

(4) பொது நோக்கங்களுக்கான இறுப்பனவு

இவை கடைகள், அலுவலகங்கள், வங்கிகள், பண்டகசாலைகள், பொதுக் கட்டடங்கள், ஆஸ்பத்திரிகள், கல்வி நிறுவனங்கள், பொழுதுபோக்கு இடங்கள் மேலும் இதுபோன்ற இடங்களுக்குப் பொருந்தும்.

4—1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏ. க்கும் குறைவான வழங்கல்களுக்குப் பொருந்துவன.
(அ) ஒவ்வொரு அலகுகளுக்கும் அலகொன்றுக்கு ரூபா. 2/25ம் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்,
(ஆ) கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும் 5 கே. வி. ஏ. வரையிலும் ரூபா. 30/-
5 கே.வி.ஏ. தொடக்கம் 10 கே.வி.ஏ. வரையும் ரூபா. 50/-
10 கே.வி.ஏ.க்கு மேல் 50 கே வி.ஏ.க்குக் குறைய ரூபா. 150/-ம் அறவிடப்படும்.

4-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே.வி.ஏ.க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்குப் பொருந்துவன-
(அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா. 2/15ம் அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
(ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத் தேவையின் கே.வி.ஏ. ஒன்றுக்கு ரூபா. 125/- வீதப்படியும்.
(இ) நிலையான கட்டணம் ரூபா. 300/-ம் அறவிடப்படும்.

(5) கைத்தொழில் இறுப்பனவு

இவை முழுமையாகவோ அல்லது பிரதானமாகவோ தொழிற்சாலைகள், தொழிற்களங்கள், வார்ப்புச் சாலைகள், எண்ணெய் ஆலைகள் நூற்பு நெசவு நிலையங்கள், பம்பு நிலையங்கள், துறைமுக கப்பல் தங்குமிட நிர்மாணங்கள் மற்றும் இதனையொத்த கைத்தொழில் நிர்மாணங்களுக்கான மின் இரசாயன, மின் இயக்க நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகும்.

5-1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே.வி.ஏ. க்குக் குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்.
(அ) ஒவ்வொரு அலகுகளுக்கும் அலகொன்றிற்கு ரூபா. 2/25ம் அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
(ஆ) கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்.
5 கே.வி.ஏ வரையும் ரூபா 30/-
5 கே.வி.ஏ. தொடக்கம் 10 கே.வி.ஏ. வரையும் ரூபா. 50/-
10 கே.வி.ஏ. க்கு மேல் 50 கே.வி.ஏ.க்குக் குறைய ரூபா 150/-ம் அறவிடப்படும்.

5-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே.வி.ஏ. க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்கும் பொருந்தும்.
(அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா. 2/15ம் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்
(ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத்தேவையின் கே.வி.ஏ. ஒவ்வொன்றிற்கும் ரூபா 100/- வீதமும்
(இ) நிலையான கட்டணம் ரூபா. 300/-ம் அறவிடப்படும்.

(6) ஹோட்டல் இறுப்பனவு

இவை உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் அதனையொத்த இடங்களுக்குப் பொருந்தும்.

6—1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏக்குக் குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்—
(அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா. 2/25ம் அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
(ஆ) கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்.
5 கே. வி. ஏ வரையும் ரூபா. 30/-
5 கே. வி. ஏ. தொடக்கம் 10 கே. வி. ஏ. வரையும் ரூபா. 50/-
10 கே. வி. ஏக்கு மேல் 50 கே. வி. ஏ.க்குக் குறைய ரூபா. 150/-ம் அறவிடப்படும்.

6—2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே.வி.ஏ.க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்கும் பொருந்தும்.
(அ) அலகுகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா. 2/15ம் அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
(ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத்தேவையின் கே. வி. ஏ. ஒன்றுக்கு ரூபா. 150/- வீதப்படியும்
(இ) நிலையான கட்டணம் ரூபா. 300/- ம் அறவிடப்படும்.

(7) தற்காலிக மின் விநியோகம்

(அ) அலகு ஒன்றுக்கு ரூபா. 3/-ம் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்
(ஆ) பொருட்களின் வாடகையாக, பெறுமதியின் 10%மும்
(இ) கூலிகள், மேற்பார்வைக் கட்டணமும்
(ஈ) நுகர்ச்சிக்கான ஒரு வைப்புப்பணமும் அறவிடப்படும்.
(உ) களியாட்ட விழா போன்ற தேவைகளுக்கு மதிப்பிடப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகமாக கே. வி. ஏ. ஒன்றுக்கு ரூபா .50/- அறிவிடப்படும்.

(8) பொது அறவீடுகள்

1.(அ) புதிய நிறுவுதல்களுக்கும் ஏற்கனவே உள்ள நிறுவுதல்களின் விஸ்தரிப்புகளுக்கும் முதல் சோதனை இலவசம்
(ஆ) முதல் சோதனை திருப்தியளிக்கவில்லையாயின் ஒவ்வொரு மேலதிக சோதனைகளுக்கும்
ஒரு நிலை நிறுவுதல் .... ரூபா. 50/-
மூன்று நிலை நிறுவுதல் .... ரூபா. 150/-

(2) மானிப் பரிசோதனை

பாவனையாளரின் வேண்டுதலின் பேரில் மானிப் பரிசோதனை ரூபா. 100/- (மானியம் செம்மை இல்லாத தன்மை 2½ சதவீதத்தைவிட கூடவோ அல்லது குறைவாகவோ காட்டுமேயானல் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும்.)

(3) கொடுப்பனவுகளின் தாமதத்திற்கான விதிப்பனவுகள்

பாவனையாளர் ஒருவரின் மின்சார விதிப்பனவுக் கணக்குகள் 30 நாட்களுக்கு மேல் நிலுவையாக உள்ள சந்தர்ப்பத்தில் அம் மின்சார விநியோகத்தைத் துண்டிப்பதற்குக் கட்டளை இடப்படும். துண்டிப்புக் கட்டளை இடப்படுமாயின் நிலுவைத் தொகையுடன் அதன் 10 சதவீத மேலதிகக் கட்டணமும் அத்துடன் துண்டிப்பு நடவடிக்கை எடுக்கும் கட்டணமாக ரூபா. 100/-ம் அறவிடப்படும்.

(4) ஒழுங்குவிதிகளை மீறுபவர்மீது (மானிகளில் மாற்றம் செய்தல், மானி முத்திரைகள், கட்அவுட் முத்திரைகள் சேதப்படுத்துதல் இவை போன்றவை) அவர்களது மின்சாரம் துண்டிக்கப்படுவதுடன் ரூபா. 2000/- விதிப்பனவு அறவிடப்பட்டு மானியின் பதியப்படாத மின்பாவனைக்காகக் கட்டணம் சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டு, அக்கட்டணத்துடன் 25% மேலதிகக் கட்டணமும் அறவிடப்படும். மதிப்பீட்டு முறையும் காலமும் சபையின் தன்விருப்பு உரிமையைப் பொறுத்தது.

(5) சட்ட விரோத மின்விஸ்தரிப்புக்களை வேறு கட்டடங்களுக்கு (மீற்றர் மூலம்) கொடுத்தலுக்காக மேலதிகக் கட்டணமாக ரூபா 250/- அறவிடப்படும்.

(6) பாவனையாளர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் மின்விநியோகம் துண்டிக்கப்பட்ட பின் மீண்டும் விநியோகம் வழங்குவதற்கு கட்டணம் ரூபா 100/- அறவிடப்படும்.

(7) மின்சாரம் தடைப்படும் போது சேவையின் உருக்கியை மீளப் பொருத்துவதற்காக-
ஒரு நிலைக்கு .... ரூபா 10/-ம்
மூன்று நிலைக்கு .... ரூபா 20/ம் அறவிடப்படும்.

இது விடயமாக இன்னும் பூரண விளக்கம் தேவையாயின் முல்லைத்தீவு, முள்ளியவளை அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். காலதாமதமாகச் செலுத்தப்படும் நிலுவைப்பணங்களுக்கு மேலதிகப்பணம் செலுத்த வேண்டியதுடன், துண்டிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படவிருப்பதால், தயவு செய்துமாதாந்த சிட்டைகள் வரும்வரையும் காத்திருக்காமல் மாதாந்தம் தவறுமல் குறைந்தது ஒரு சராசரித்தொகையைக் காரியாலயத்திற்குச் சென்று செலுத்தி வருவதால், மேலே கூறிய மேலதிக பணமோ, அல்லது துண்டிக்க வேண்டிய சந்தர்ப்பத்தையோ சுலபமாக விலக்கிக் கொள்ளலாம் எனவும் ஆலோசனை கூற விரும்புகிறேன்.

சின்னையாபிள்ளை கந்தையா சர்வானந்தன்
விசேட ஆணையாளர்
கரைத்துறைப்பற்று பிரதேச சபை.

கரைத்துறைப்பற்று பிரதேசசபை அலுவலகம், முல்லைத்தீவு. 07-07-1988 முல்லைத்தீவு.

(சீ 5918)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:

உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று.

பொருள்:

தாமே உணர்கின்ற தன்மை உடையவரின் முன் கற்றவர் பேசுதல், தானே வளரும் பயிருள்ள பாத்தியில் நீரைச் சொரிந்தாற்போன்றது.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22703
27-07-1988 த. பெ. இல 23

தூரத்துத் தண்ணீர்....

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிராந்தியத் தலைமை அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட வேண்டும் என்ற குரல் எழுந்துள்ளது.

இப்போது செஞ்சிலுவைச் சங்கத்தின் பிராந்தியத் தலைமைக் காரியாலயம் கொழும்பில் மட்டுமே உண்டு. யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்க அலுவலகங்கள் சாதாரண கிளைகளே. கொழும்பு பிராந்தியத் தலைமை அலுவலகம் ஊடாக இயங்குபவையே.

கிளை அலுவலகங்கள் தன்னிச்சையாகத் திட்டங்களைத் தயாரித்துச் செயற்பட முடியாது. கொழும்பு பிராந்தியத் தலைமை அலுவலகத்தின் அனுசரணை, அனுமதி, அங்கீகாரம் என்பன தேவை.

அதனால் அடிக்கடி பாதிப்புக்கு உள்ளாகி வரும் தமிழ்ப் பகுதிகளில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்கக் கிளைகள் தமது பகுதிகளுக்குத் தேவைப்படும் உதவிகளை ஜெனிவாவில் உள்ள தலைமைக் காரியாலயத்துக்கு நேரடியாக எடுத்துச் சொல்லித் தாமதமும், தடங்கலும் இன்றிப் பெற முடிவதில்லை.

இலங்கையைப் பொறுத்த வரையில், தமிழ்ப் பகுதிகளே அடிக்கடி பாதிப்புக்கு உள்ளாகி வருவதால் அப்பகுதி மக்களுக்கு, ஆபத்துக்கு உதவுவதற்குச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணி பெரிதும் வேண்டப்படுகிறது.

அதன் நிமித்தம் எப்போதும், எல்லாவற்றுக்கும் கொழும்பின் அனுசரணையையும் ஆதரவையும் எதிர்பார்த்திருக்காமல், ஜெனிவாவுடன் நேரடித் தொடர்பு வைத்து இயங்கக்கூடிய பிராந்தியத் தலைமை அலுவலகம் ஒன்று தமிழ்ப் பகுதியில் தேவை.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் பலருக்கு உதவ வேண்டிய தேவை உண்மையாகவே உண்டு. அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கம் விரும்பியது. நான்கு மாவட்டங்களையும் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணம் பெறத் தகுதியானவர்கள் எனக் கண்டது.

ஆனால் அது தன்னிச்சையாகத் தீர்மானம் எடுக்க முடியாது என்பதால், கொழும்பில் உள்ள பிராந்தியத் தலைமைக் காரியாலயத்தின் அனுமதியைக் கோரியிருந்தது.

சம்பந்தப்பட்ட நான்கு மாவட்டங்களிலும் வாழும் மக்களைக் குறித்துச் சிறிதும் கவலைப்படாதிருந்த கொழும்பு அலுவலகம், யாழ்ப்பாணக் கிளையின் விண்ணப்பத்தைக் கண்டதும், தானே அந்தப் பகுதிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கப்போவதாக அறிவித்து, விண்ணப்பத்தையும் நிராகரித்து விட்டது.

இந்தச் செயலே, யாழ்ப்பாணத்திலும் செஞ்சிலுவைச் சங்கத்தின் பிராந்திய தலைமைக் காரியாலயத்தை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதற்கு உந்தும் காரணமாக இருந்தது எனலாம்.

பிந்திக் கிடைக்கும் நீதி, கிடைக்காத நீதிக்குச் சமம் என்று சொல்வார்கள். அதே போல ஆபத்தில் அகப்பட்டவர்களுக்கு, அல்லது உயிர் மீட்புக்கு உடன் தேவைப்படும் உதவி உரிய நேரத்தில் கிடைக்கவில்லை என்றால் அதனால் பயனில்லை.

தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்கு உதவாது என்பது அப்படியே உண்மை. ஆகையால் ஈழத் தமிழ் மக்களுக்கு உரிய நேரத்தில் உதவிக் கரம் நீட்டுவதற்குச் செஞ்சிலுவைச் சங்கம் தமிழ்ப் பகுதியில் தனது பிராந்தியத் தலைமை அலுவலகம் ஒன்றை நிறுவுவது நல்லது.

வளை குடா யுத்த நிறுத்தப் பேச்சு; ஐ. நா.வில் இன்று ஆரம்பமாகின்றது

வாஷிங்டன், ஜூலை 26

ஈரான், ஈராக் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடனான பேச்சுக்களை புதன் கிழமை ஐ நா பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் ஆரம்பிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பூர்வாங்கப் பேச்சுக்களின் போது ஐ நா பொதுச் செயலாளர் இரண்டு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களைத் தனித் தனியே சந்திப்பார்.

பேச்சுக்களின் முன்னேற்றத்தைப் பொறுத்தே இரண்டு அமைச்சர்களும் நேரடியாகச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு ஏற்படும் என்று தெரிய வருகின்றது.

யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்காக ஐநா தயாரித்துள்ள நிபந்தனைகளை பொதுச் செயலாளர் அமைச்சர்களிடம் தனித்தனியே எடுத்துச் சொல்வார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஈரானின் வெளியுறவு அமைச்சர் வேலாயடியும் ஈராக்கின் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸும் வாஷிங்டனில் தங்கி உள்ளனர். (எ)

வெளி உலகில்

அமைச்சரவை மாற்றம்

பிரிட்டிஷ் அமைச்சரவை நேற்று மாற்றி அமைக்கப்பட்டது.

இருபத்தொன்று மாறுதல்களை பிரதமர் மார்கறற் தாட்சர் செய்தார்.

அமைச்சரவை மாற்றத்தை எதிர்க்கட்சித் தலைவர் நீல் கின்னொக் கிண்டல் செய்தார்.

''பீட்டுக் கட்டில் உள்ள ஜோக்கர்கள் அப்படியே தான் இருக்கிறார்கள்'' என்று அவர் சொன்னார். (எ)

கொலம்பியாவில் கெரில்லாக்கள் மோதல்

பொகொடா, ஜூலை 26

'எம் 19' இயக்க கெரில்லாக்களுடன் கொலம்பிய அரசுத் துருப்புக்கள் வார இறுதியில் கடும் சண்டை போட்டதாக செய்திகள் வெளி வந்துள்ளன.

இம்மோதலில் 20 கெரில்லாக்கள் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சர் அறிவித்தார். டொல்மா பிராந்தியத்தில் இம்மோதல் இடம்பெற்றதாகவும்,

அரசுத் துருப்புக்களை கெரில்லாக்கள் சுற்றி வளைத்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டது. (எ)

பணயக் கைதிகளான அமெரிக்கப் பிரசைகள்

வாஷிங்டன் ஜூலை 26

லெபனனில் தீவிரவாதிகளினால் சிறை வைக்கப்பட்டு உள்ள ஆறு அமெரிக்கப் பிரசைகளையும் விடுவிப்பது குறித்து ஈரானுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு அமெரிக்க அதிபர் றேகன் இணக்கம் தெரிவித்தார்.

வளைகுடா யுத்த நிறுத்தம் குறித்து ஐ.நா.மேற்கொண்டு வரும் முயற்சிகளுடன், அமெரிக்கப் பிரசைகள் ஆறுபேரையும் விடுவிப்பதையும் சேர்க்கும் படி அதிபர் றேகனுக்குத் தெரிவிக்கப்பட்டது. (எ)

தி.மு.க.வை உடைக்க 'ரே' உளவுப் பிரிவு முயற்சி!

கருணாநிதி தகவல்

மதுரை, ஜூலை 26

தி.மு.க. தலைவர் கருணாநிதி மதுரையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அதன் விவரம் வருமாறு:

நெடுஞ்செழியன் நிலை

கேள்வி:- நாவலர் போன்றவர்களுக்கு அந்தக்கட்சியில் இன்று ஏற்பட்டு இருக்கும் நிலை குறித்து என்ன கூறுகிறீர்கள்?

பதில்:- நாவலரைப் பொறுத்த வரையில் தம்பிவா, தலைமை ஏற்கவா, உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம் என்று அண்ணா அழைத்த காலத்தை எண்ணிப் பார்க்கிறேன்.

மதிப்பு-மரியாதை

நான் முதலமைச்சராகவும், அவர் அமைச்சராகவும், நான் கழகத் தலைவராகவும், அவர் பொதுச் செயலாளராகவும் இருந்த காலத்தில் மூத்த தலைவர்கள் ஒருவருக்கு ஒருவர் அளித்த மதிப்பையும் மரியாதையையும் எண்ணிப் பார்க்கிறேன்.

இப்போது அந்த மதிப்பு, மரியாதைகளை எல்லாம் கேட்டுப் பெற வேண்டிய இடத்துக்கு நாவலர் போய் விட்டாரே என்பதையும் எண்ணிப்பார்க்கிறேன்.

தி.மு.க.வில் சேருவாரா?

கேள்வி:- நாவலர், பண்ருட்டி, திருநாவுக்கரசு போன்றவர்கள் மீண்டும் தி.மு.க. வில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா?

பதில்:- அப்படி அவர்கள் யாரும் விருப்பம் தெரிவிக்கவில்லை. அதனால் இந்த கேள்விக்கே இடம் இல்லை.

ஜனதாவுடன் உறவா?

கேள்வி:- இரா.செழியன் மதுரையில் பேசும் போது தி.மு.க. வை ஜனதா கட்சி பேச்சாளர்கள் தாக்கிப் பேசுகிறார்கள் என்பது சரியல்ல என்றும், அப்படிப் பேசி இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறி இருக்கிறாரே அதனால் ஜனதா கட்சியுடன் உறவு ஏற்படுமா?

பதில்: ஜனதா கட்சியோடு அகில இந்திய அளவில் உறவு கழகத்துக்கு உண்டு. மாநில அளவில் ஜனதாவுடன் உடன்பாடு குறித்து தி. மு. க. எடுத்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை. மேலும் நீங்கள் கூறும் செழியன் அவர்கள் பேச்சை நான் படிக்கவில்லை.

காங்கிரஸ் சதி

கேள்வி;- சிவாஜி கூறும்போது. அ தி.மு.க.வை காங்கிரஸ் உடைத்து விட்டது. தி.மு.க. வையும் உடைக்க சதி நடக்கிறது என்று கூறி இருக்கிறாரே அது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்:- பொதுவாக மத்திய உளவு நிறுவனத்தின் (ரே) அரசியல் பிரிவு வேலைகள் தமிழ் நாட்டில் முடுக்கி விடப்பட்டு உள்ளன. இதை நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிறவெறி அரசு படையில் சேர வெள்ளை இனத்தவர் மறுப்பு!

கேப்டவுன், ஜூலை 26

கட்டாய ராணுவ சேவைக்கு வர மறுத்த வெள்ளை இனத்தவர் ஒருவருக்கு தென் ஆபிரிக்க நீதிமன்றம் ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியது.

சிறைத் தண்டனை பெற்ற வெள்ளையரின் பெயர் டேவிட் புரூஸ்

''நிறவெறி பிடித்த அரசாங்கத்தைப் பாதுகாப்பதை நான் விரும்பவில்லை. அதனால் தான் கட்டாய இராணுவ சேவையில் சேர நான் மறுத்தேன்'' — இப்படி புரூஸ் தெரிவித்தார்.(எ)

ஒரு கட்சி அரசமைப்பு பர்மாவில் நீடிக்கும்

ஒரு கட்சி அரசியல் அமைப்பை மாற்றுவதா என்பது மக்கள் கருத்தை அறிய சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற யோசனையை பர்மாவின் ஆளும் சோஷலிசக்கட்சி நிராகரித்துவிட்டது.

அரசுத் தலைவர் பதவியில் இருந்து விலகிய ஜெனரல் நீவின் இந்த யோசனையை கட்சியின் மாநாட்டில் சமர்ப்பித்து இருந்தார்.

சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டியதில்லை என்று மாநாடு ஏகமனதாக தீர்மானித்ததாக அறிவிக்கப்படுகிறது.

ஜெனரல் நீவினின் ராஜினாமாவையும் மாநாடு ஏற்றுக் கொண்டது.

ஆளும் கட்சி உபதலைவர் சன்யூவின் இராஜினாமாவையும் மாநாடு ஏற்றுக்கொண்டது.

பர்மாவின் அரசுத் தலைவராக ஜெனரல் நீவின் 26 ஆண்டுகளாக இருந்து வந்தார். (எ)

பூவரசங்குளம்— இராசேந்திரன் குளம்

சுற்றி வளைப்பில் ஒருவர் சைனட் அருந்தினார்

திங்கள் அதிகாலை பூவரசங் குளம் இராசேந்திரன் குளம் பகுதிகளில் இந்தியப்படையினர் மேற்கொண்ட திடீர் தேடுதல் வேட்டையின் போது இளைஞர் ஒருவர் சைனைட் அருந்திமரணமானார். அவரது சடலத்தை படையினர் எடுத்துச் சென்றனர்.

வீடொன்றில் இருந்த வேளையிலேயே இவர் சுற்றி வளைக்கப்பட்டார் என்றும் இவரிடம் இருந்த கிரனைட் ஒன்றை படையினர் கைப்பற்றினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் பம்பைமடு புளியங் குளம் பகுதியில் தேடுதலில் ஈடுபட்ட படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்து எலும்பு முறிந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் திங்களன்று வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சந்தனம் புஸ்பராஜா (36வயது) என்பவரே இவர் ஆவர். (இ-164)

குடியேற்றப் பிரச்சினை தீரும்வரை....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியிருந்தது. (பக்கம் 122 — தமிழ்)

அ) சகல அரச காணிகளையும் 99 வருடக் குத்தகைக்கு மாகாண சபைகளுக்கு கொடுப்பது.

ஆ) சகல அரச காணிகளையும் காணி சபை அல்லது ஆணைக்குழுவிற்கு கையளித்து அத்தகைய சபை அல்லது ஆணைக்குழுவிலிருந்தே மத்திய அரசும் மாகாணசபையும் தங்கள் தேவைக்குரிய காணிகளை பெற்றுக்கொள்ளுதல்.

இ) அரச காணி மாகாண சபைக்கு உரித்தாக்கப்பட்டு — மத்திய அரசு தன் தேவைக்கு மாகாண சபையிடமிருந்து பெற்றுக் கொள்வது

இலங்கை அரசு மேலே (ஆ)வில் சொல்லப்பட்ட மாற்றுத் திட்டத்தை கீழ்க்கண்ட விதத்தில் ஏற்றுக்கொள்ள ஒப்புக் கொண்டது:

''ஒரு தேசிய காணி ஆணைக்குழு நிறுவப்படும். அரசின் நம்பிக்கைப் பொறுப்பாக ஆணைக்குழு காணியின் உரிமை உடையதாய் இருக்கும். காணி ஆணைக்குழுவின் வேலைகள் கீழ்க்கண்டவற்றையும் உள்ளடக்கும்.

அ) அரச காணி உபயோகம் சம்பந்தமாக தேசியக் கொள்கை வகுத்தல்.

ஆ) மாகாண சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கப்பட்ட விடயங்களின் தேவைகளுக்காக மாகாண சபைகளுக்கு காணி கிடைக்கச் செய்தல்.

இ) அரசாங்க முகவர் நிறுவனங்களுக்கு அவற்றின் வேலைக்கு தேவையான காணிகளை அவற்றிற்கு கிடைக்கச் செய்தல்.

தேசிய ஆணைக் குழுவில் ஒவ்வொரு மாகாண சபையின் பிரதிநிதியும் இடம் பெற்றிருப்பதுடன் அது ஒரு பல்தொழில் நுட்ப செயலகத்தின் உதவியையும் பெற்றதாயிருக்கும்.

பிரதான அமைப்பிற்கு ஆலோசனை சபையாக இயங்கின் தேசிய காணி ஆணைக்குழுவின் துணைக் குழுக்கள் நிறுவப்படுவதற்கு ஆட்சேபனை கிடையாது,''

கைவிட்டனர்

இந்திய அரசின் மாற்றுத்திட்டத்திற்கு இலங்கை அரசினால் கொடுக்கப்பட்ட மேற்படி திருத்தம் அரசயாப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்திலிருந்து முற்று முழுதாகக் கைவிடப்பட்டுள்ளது. இலங்கை அரசினால் கொடுக்கப்பட்ட உத்தரவாதம் இவ்விதம் அதனாலேயே மீறப்பட்டுள்ளது. இலங்கை அரசு தனது வாக்குறுதியை மீற இந்திய அரசு ஏன் அனுமதித்தது? தமிழ் மக்களுக்கு இந்திய அரசின் மறுமொழி தான் என்ன?

மேலே சொல்லப்பட்ட இலங்கை அரசின் வெளியீட்டின் பின் இணைப்பு II-ல் உபபந்தி 14 (பக்கம் – 107 தமிழ்) கீழ்க் கண்டபடி குறிப்பிடப்பட்டிருக்கிறது;-

''அத்தகைய திட்டங்களின் கீழ் எவரேனும் பிரசைக்கு அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்புக்கு அத்தகைய காணிகளைப் பராதீனப்படுத்தும் அல்லது கையுதிர்க்கும் பணி (1) மாகாண சபையின் நியதிச் சட்டங்களுக்கு இணங்கவும் வேறு எச் சட்டங்களின் கீழ் மாகாணசபைகள் செயற்படுவதற்கு உரித்தளிக்கப்பட்டதோ அத்தகைய வேறு சட்டங்களுக்கிணங்கவும் மாகாண சபையின் ஆலோசனையின் பேரில அம்மாகாண சபையின் (2) ஆளுநரினால் [illegible] மேலே (1), (2) என [illegible] காணப்படும் பகுதிகள் இலங்கை அரசியல் யாப்பின் 13-ம் திருத்தத்தில் கீழ்க்கண்டபடி மாற்றப்பட்டுள்ளன:-

(1) முறையே இவ்விடயத்தைப் பொறுத்த சட்டங்கள் (2) ஜனாதிபதி

குறித்த பின் இணைப்பின் 1.2 ம் பந்தி வரைவுப் பிரேரணைகளின் 1.3 பந்தியிலிருந்தும் கணிசமான அளவு வேறுபடுகின்றது. ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைபு பிரேரணையிலிருந்து இலங்கை அரசு கணிசமான அளவு மாற்றங்களைச் செய்துள்ளது. இவற்றை எப்படி இந்திய அரசு ஏற்றுக்கொண்டதென்பதற்கு இந்திய அரசு தமிழ் மக்களுக்கு என்ன சமாதானம் சொல்லவிருக்கிறது?

இந்தியயாப்பில்

இந்திய யாப்பில் இந்திய மத்திய அரசின் அதிகாரங்கள் சம்பந்தமான பட்டியலில் 56 வது விடயமாக ''பாராளுமன்றத்தினால் ஆக்கப்படும் சட்டங்களுக்கமைய மாநிலங்களுக்கிடையேயான ஆறுகள் ஆற்றுப்பள்ளத் தாக்குகள் ஆகியவற்றின் ஒழுங்குபடுத்தலும் அபிவிருத்தியும்'' மத்திய அரசின் விடயங்கள் ஆகும். ஆனால் காவேரி ஆற்று நீர் பிணக்குப் போன்ற மாநிலங்களுக்கிடையேயான பிணக்குகளைப் பார்க்கும் போது மத்திய அரசு இவ்விடயத்தில் எவ்வித சட்டமாக்கமும் செய்யவில்லை என்றும் இது வெறுமனே மத்திய அரசின் அதிகாரப்பட்டியலில் மட்டும் இருக்கிறது என்றே ஊகிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இலங்கை அரசோ தமிழ் மக்களைப் பொறுத்த இந்த அதிமுக்கிய விடயத்தில் எத்தகையோ கட்டுப்பாடுகளை [illegible]

ஒப்பந்தத்தில் காணப் [illegible] வடக்கு கிழக்கு மாகாணத்தில் கருத்துக் கணிப்பு என்ற விடயம் இங்கேயே ஆராயப்படலாம். ஏனெனில் இது தமிழர்களுக்கான தாயகம் என்ற கோட்பாட்டுடன் பின்னிப்பிணைந்த விடயமாகும். ஒப்பந்தத்தின பந்தி 2:3 கீழ்க்கண்டபடி உள்ளது:-

1. கிழக்கு மாகாணம் வடக்கு மாகாணத்துடன் ஓரே நிர்வாக பகுதியாக இணைந்து இருப்பதா? தொடர்ந்து பந்தி 2:2 இல் கண்டுள்ளபடி ஆளப்படுவதா அல்லது
2. தனி நிர்வாகப் பகுதியாக தனக்கென தனமாகாணசபை, தனி ஆளுநர், தனிமுதல்வர், தனி அமைச்சரவையுடன் இயங்குவதா? என்பதை கிழக்கு மாகாண மக்கள் தீர்மானிக்க 1988 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் ஒரு வாக்கெடுப்பு நடத்தப்படும்.

முரணானது

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்கள் வரலாற்றுக் காலந்தொட்டு வாழ்ந்து வரும் இடங்கள் என இப்போது ஒப்பந்தம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கருத்துக்கு முற்றிலும் முரணானதே இந்த வாக்கெடுப்பு பற்றிய பிரேரணை.

ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இனக்குழுக்கள் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியராவர். போர்த்துக்கேயர்களின் வருகைக்குப் பின் பறங்கியர் ஓர் இனமாக உருவெடுத்தனர். அத்துடன் அவர்கள் கொழும்பைச் சுற்றியே நெருங்கி வாழ்கின்றனர். அதனால் இவ்வாக்கெடுப்பு நோக்கத்திற்கு அவர்கள் நிலை ஆராயப்படத் தேவையில்லை.

இலங்கை முஸ்லிம்கள் (அவர்கள் சோனகர் என அழைக்கப்படுகின்றனர்) தமிழை தாய் மொழியாகக் கொண்டவர்கள் என்பது பொதுவாக ஏற்கப்பட்ட தொன்று.

சிங்களவரைப் பொறுத்தளவில் 1921-ம் ஆண்டின் குடிசனமதிப்பீட்டின்படி வடக்கு கிழக்கு மாகாணத்தில் அவர்கள் எண்ணிக்கை 2.2 சதவீதம் மட்டுமே. ஆயினும் இந்நூலின் 1ம் பாகத்தில் விளக்கியுள்ளபடி போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபொழுது இங்கு மூன்று அரசுகள் இருந்தன. பின்பு இவை பிரித்தானிய ஆட்சியின் போது 1833-ல் ஒரு நிர்வாக அமைப்பின் கீழ்க் கொண்டு வரப்பட்டு முழு இலங்கையும் ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டன. தற்போதைய வடக்கு கிழக்கு மாகாணங்கள் எப்பொழுது தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டன என்ற விபரம் தெரியவில்லை. ஆனால் நிர்வாக வசதிக்காக பிரித்தானிய குடியேற்ற அரசினால் செய்யப்பட்ட இப்பிரிவு சரித்திர காலம் தொட்டு பூகோள ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் தமிழ் இராச்சியம் ஒன்றிணைந்திருந்தது என்ற உண்மையை அழித்து விட முடியாது.

சிங்கராயர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்ஜூலை 27

யாழ். கல்வித் திணைக்கள நலன்புரி கழகத்தின் சார்பில் யாழ் கல்வித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் ''நிவாரணம் கை கொடுக்குமா'' என்னும் தலைப்பில் அருட்திரு. ஆபரணம் சிங்கராயர் சொற்பொழிவாற்றுவார்.

இந் நிகழ்ச்சிக்கு கழகத்தின் தலைவர் திரு. மு. சிவசுப்பிரமணியம் தலைமை வகிப்பார்.

யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் ஆரம்ப உரை நிகழ்த்துவார்.

இந்நிகழ்ச்சி இன்று புதன்கிழமை காலை 11மணிக்கு நடைபெறும். (இ-10)

சமய நிகழ்ச்சிகளில்

இன்று தேர்

கோப்பாய், ஜூலை 27

வடகோவை பலாலை கண்ணகை அம்மன் கோவிலின் வருடாந்த இரத உற்சவம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 10.00 மணிக்கு அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆரோகணமாகி நண்பகல் 12.00 மணிக்கு அவரோகணம் செய்வாள்.

★ ★

நீர்வேலி வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலின் இரத உற்சவம் இன்று புதன்கிழமை நடைபெறுகின்றது.

நாளை வியாழக்கிழமை தீர்த்த உற்சவம் நடைபெறும். (இ - 72)

யாழ். சாயிசமித்தியில் "குருபூர்ணிமா"

யாழ்ப்பாணம் ஜூலை 27

''குருபூர்ணிமா'' தினம் நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமை சேர் பொன் இராமநாதன் வீதி திருநெல்வேலி தெற்கு சமித்தி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவாசமித்தியினரால் நடத்தப்படும் இந்நிகழ்ச்சி காலை 5-45க்கு நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி பஜனை மங்கள ஆரார்த்தி மதிய போசனத்துடன் முடிவடையும்.

அமைதிப்படை முகாம்

கொடிகாமம் ஜூலை27

கண்டாவளை அரசாங்க தமிழ்க்கலவன் பாடசாலையில் இந்திய அமைதிப் படையினர் முகாம் அமைத்துள்ளனர். (இ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகட்டிவ் (PROCESSING) செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச் சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

உதயன்

27 - 07 - 1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பட்டப் பகலில் கண்டியில் கொள்ளை !
முப்பது லட்சம் ரூபா !!

கொழும்பு, ஜூலை 27

இனந்தெரியாத நபர்கள் சிலர், கண்டியில், பட்டப்பகலில், 30 லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்தனர்.

சிகரெட் கம்பெனி முகவர் ஒருவர் வங்கியில் வைப்புச் செய்வதற்காக 30 லட்சம் ரூபா பணத்தை எடுத்துச் சென்ற சமயம், இனந்தெரியாத நபர்கள் அவரைத் தாக்கி பணத்தை அபகரித்துச் சென்றதாக அறிவிக்கப்பட்டது.

கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் கட்டுகாஸ்தோட்டையில் அனாதரவாக நிற்கப் பொலீஸாரினால் கண்டு பிடிக்கப்பட்டது. (ஒ-எ)

தாதி பயிலுனர்
உடனடியாகத் தேவை

தாதி பயிலுனர் உடனடியாகத் தேவை. விரும்புவோர் அத்தாட்சிப் பத்திரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் திருமதி இராஜேஸ்வரன்

திருநெல்வேலி வடக்கு. (C 5946)

ஜாக் ஹமர் ஒப்பறேட்டர்கள்
(JACK HAMMER OPERATORS)
தேவை

வட பகுதியில் உள்ள கற்குவாரி ஒன்றில் வேலைக்கு அமர்த்துவதற்கு ஜாக் ஹமர் ஒப்பறேட்டர்கள் (JackHammer Operators) தேவை. இதில் ஏற்கனவே அனுபவம் உள்ளவர்கள் அல்லது பயிற்சி பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் பெயர், அடையாள அட்டை இலக்கம், முகவரி, கல்வித் தராதரம், வேலை அனுபவம் ஆகிய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட முகவரியில் 01-08-1988 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குச் சமுகமளிக்கவும்

மாகாணப் பணிப்பாளர் (வடக்கு)
அலுவலகம்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
761, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(C5955)

நிலையற்ற தன்மை, பயங்கரநிலை; இன்றைய இலங்கை குறித்து டிக்ஸிற்

சென்னை, ஜூலை 27

அரசியல் ரீதியில் நிலையற்ற தன்மையும், வன்செயல்களைப் பொறுத்தவரை பயங்கர நிலைமையும் தான் இலங்கையில் காணப்படுகிறது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

புதுடில்லிக்குச் செல்லும்வழியில் திரு. டிக்ஸிற் 'இந்து' வுக்கு பேட்டி அளித்தார்.

சகஜ நிலைமையைக் கொண்டு வர இருதரப்பாரும் நிறைய முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று அவர் பேட்டியில் கூறியுள்ளார்.

இரண்டுதரப் பாரும் யார் என்பதை அவர் தெரிவிக்க மறுத்து விட்டார்.

இலங்கையின் பிந்திய நிலவரம் பற்றி இந்திய அரசுக்கு எடுத்துச்சொல்லவே திரு. டிக்ஸிற் புதுடில்லி சென்றுள்ளார் என்றும் தகவல் வந்துள்ளது.

திரு. டிக்ஸிற்றுடன் இந்திய அமைதிப்படை பிரதித் தளபதி லெப். ஜெனரல் ஏ. என். ... தும் சென்றிருக்கிறார். (ஒ-எ)

யாழ் — திருமலை பஸ்சேவை ஆரம்பம்

வவுனியாவில் தரித்துச் செல்லும்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணம் – திருகோணமலை பஸ் சேவை மீண்டும் நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த சில நாட்களாக திருகோணமலையில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாகவும், அங்கு அமுல்படுத்தப்பட்ட முழுநேர ஊரடங்கு காரணமாகவும், யாழ். – திருமலை பஸ் சேவை நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும் திருகோணமலை மாவட்டத்தில் பகல்நேர ஊரடங்கு தளர்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்று நேற்றுக் காலை திருகோணமலைக்கு சேவையில் ஈடுபட்டது. எனினும் அங்கு நேற்று மீண்டும் நண்பகலில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதையடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்து திருமலைக்குச் சென்ற பஸ் வவுனியாவில் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பஸ் இன்று காலை வவுனியாவில் இருந்து புறப்பட்டு நண்பகலுக்கு முன்னர் திருகோணமலையைச் சென்றடையும்.

திருகோணமலையில் முழுநேர ஊரடங்கு தளர்த்தப்படும் வரை யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் பஸ் வவுனியாவில் தரித்தே செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பு பஸ் சேவையும் நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. (ஒ-9-10)

இராமநாதபுரம் ...
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்கள் காரணமாக காட்டுப்பகுதிகளை அண்டியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இதேவேளை காட்டுப் பகுதிகளை நோக்கி ஹெலிக்கொப்ரரில் இருந்தும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதனால் சில பகுதிகளில் தீ பற்றி எரிவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. காட்டுப் பகுதிகளில் விமானத் தாக்குதல்களும் நடைபெற்றதாகக் கூறப்பட்டபோதிலும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. (ஒ-ரி-10)

புதுடில்லியில்...
(1-ம்பக்கத்தொடர்ச்சி)

அக்கறை காட்டுகிறது.

சென்னைப் பேச்சுக்களினால் வேறுபாடுகள் சமாளிக்கக்கூடிய அளவு குறைக்கப் பட்டுள்ளன.

தலைவர்கள் கலந்து பேசி முடிவு எடுக்கக் கூடியதாக யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வர வேண்டும் என்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வற்புறுத்தலால் ஏற்பட்டுள்ள கஷ்டமும் தாண்ட முடியாத ஒன்றல்ல என்றே கருதப்படுகிறது. (அ-எ)

நேற்றைய . . .
(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளில் சிறிது நேரம் பதற்றம் நிலவியதாயினும் பின்னர் வதந்தி என்பதை அறிந்த மக்கள் மாலை ஆறு மணிவரை தமது வழமையான அலுவல்களை மேற்கொண்டனர். (ஒ-51)

செயலகத் . . .
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்த போது இந்த சோதனைகள் முடுக்கி விடப்பட்டிருந்தன.

செயலக ஊழியர்கள் தவிர அனைவரும் பலத்த சோதனைகள், விசாரணைகளின் பின்னரே செயலகத்தினுள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். சிலரது கைகளிலிருந்த பொதிகளும் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டன. (ஒ-9)

இன்று செயலகத்தில்

பம்பாய் வெங்காயத்தின் உத்தரவாத விலையை நிர்ணயிப்பதற்காகவும், பம்பாய் வெங்காயம் சந்தைப்படுத்தலில் உள்ள பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்குமான கூட்டம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

யாழ். செயலகத்தில் இன்று காலை 10 மணியளவில் இக் கூட்டம் நடைபெறும். (ஒ-5)

வடக்கு கிழக்கு..
(1ஆம்பக்க தொடர்ச்சி)

ஒன்று நாட்டில் ஏற்படும்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன், அமைதி ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட ஏனைய இயக்கங்களும் யுத்தத்தில் ஈடுபடும்.

எம்மவர் இறப்பர்

இதில் எம்மவர்தான் இறப்பார்கள் அமைதி ஒப்பந்தத்தின் பின்னர் ஸ்ரீலங்காப் படையினர் எவரும் இறக்கவில்லை.

ஆனால் புதிய யுத்தம் ஏற்பட்டால் எமது படையினர் மீண்டும் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படுவர் தோல்வி காணும் யுத்தம் ஒன்றில் எமது படையினர் ஈடுபட்டு இறப்பார்கள்.

மாகாண சபை முறையை ரத்துச்செய்யலாம் என்று சிலர் எண்ணுவது பகல் கனவாகவே முடியும்.

இப்படி ஜனாதிபதி தெரிவித்தார். (ஒ-எ)

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. முத்துக்குமாரு ஸ்ரீகுமார்

அன்னையின் மடியில்: 28-07—1946
அநியாயப் பிடியில்: 27—07—1983

இன்று நாங்கள் உமது ஞாபகத்தை மீட்டிப் பார்க்கவில்லை. ஏனெனில் எங்கள் மனங்களில் நீர் மனனஞ் செய்யப்பட்டுள்ளீர். எங்கள் உறவே, எம்மால் அழ முடியவில்லை. ஏன் உமது இழப்பால் எங்கள் இதயங்கள் கல்லாகி விட்டன. ஆனால் நீர் உமது மண்ணை நேசித்தபோது நிர்ப்பந்திக்கப்பட்ட மரணம் உம்மை நேசித்ததுதான் எம்மால் ஜீரணிக்க முடியாதது. ஐயா, நீர் இல்லை என்பது கசப்பான உண்மைதான். ஆனால் நீர் இருக்கிறீர் என்பது எமக்குள் ஓர் பொய்யான பிரமை எமையெலாம் எம்முயிர் உள்ள வரை வாட்டுமையா!

எங்கள் இதயங்களில் என்றும் உமைச் சுமக்கும்

மனைவி, மக்கள், அம்மா,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்.

ஞானவைரவர் கோவிலடி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். (C/5957)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
பதவி வெற்றிடம்

இப்பல்கலைக்கழகத்தில் கீழ்க்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடமிருந்து ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி:
காவற்பொறுப்பாளர் சக பழுது பார்ப்பவர் (சங்கீத கருவிகள்)

சம்பளத்திட்டம்:
ரூபா 1520 - 12X40; 4X50 - 2200 மாதமொன்றுக்கு.

தகைமை:
1. அ. இரண்டு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா.த) தேர்வில் ஆறு பாடங்களில் சித்தி
அல்லது
ஆ. எட்டாம் வகுப்பில் சித்தியடைந்து மானிய ஆணைக்குழுவில் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றில் 5 ஆண்டுகள் நிரந்தரச் சேவையைத் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளவர்.
3. விண்ணப்பதாரி வயலின், சித்தார், எஸ்ராஜ் ஆகியவற்றைப் பழுதுபார்த்தலிலும் நரம்புகளைப் பொருத்துவதிலும் தப்லா, மிருதங்கம் என்பனவற்றில் சீமெந்து இடல், அவற்றில் பதனிட்ட தோலைப் பொருத்துதல், ஆர்மோனியத்தையும் இதர உள்நாட்டுச் சங்கீதக் கருவிகளையும் பழுதுபார்த்தல் என்பனவற்றில் ஆற்றல் உடையவராகவும் உயர் கல்வி நிறுவனமொன்றில் அல்லது அரசாங்க திணைக்களமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பெற்ற நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் ஐந்தாண்டு அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
3. வழங்கல் பதிவேடுகளைப் பேணுவதிலும் சங்கீதக் கருவிகளைப் பேணிக் களஞ்சியத்தில் வைத்திருப்பதிலும் அனுபவம்.

குறிப்பு: சங்கீதத்தில் அடிப்படை அறிவுடையோர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும். தெரிவு - செய்முறைப் பரீட்சையொன்றின் மூலமும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமும் நடைபெறும்.

விண்ணப்பப் படிவங்களை நேரிலோ அல்லது சுய முகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டிய 23 X 10cm அளவுடைய உறைகளை அனுப்பி, தபால் மூலமாகவோ இப்பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் 40 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் கூடாது. அரசாங்கத் திணைக்களங்களிலிருந்து விண்ணப்பிப்போர் அத்திணைக்களத் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
15- 07 - 1988

(C 5956)

திருமலையில் இனமோதல். . . .

[1ம்பக்கத் தொடர்ச்சி]

செயல்கள் தலைதூக்கின. திருகோணமலைச் சந்தைப் பகுதி, மத்திய வீதி, மடத்தடி முஸ்லிம் பகுதி, ஜமாலியா ஆகிய இடங்களில் சிலர் வெட்டுக்காயங்களுக்கு இலக்கானார்கள்.

மடத்தடியில் சிங்களவர் ஒருவர் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகி உயிரிழந்தார். வெட்டுக்காயங்களுக்கு இலக்கான மற்றொரு சிங்களவர் வெளியே தொங்கிய தமது குடலைத் தூக்கிப் பிடித்தவாறு வீதியில் ஓடிக்கொண்டிருந்ததைப் பொதுமக்கள் கண்டனர்.

சனியன்று ஆங்காங்கே நடந்த தாக்குதல்களில் குறைந்தபட்சம் ஐந்து பேராவது உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் இத்தகவலை ஊர்ஜிதப்படுத்தமுடியவில்லை.

திருகோணமலையை அடுத்து கப்பல்துறை என்ற இடத்தில் தமிழர் குடியேற்றப் பகுதிமீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மோதல் ஆரம்பித்த விதம்

கடந்த வியாழனன்று திருகோணமலைக் கோட்டைப் பகுதிகளுள் கொடுரமாகத் தாக்கப்பட்டு உயிரிழந்த சிலரின் சடலங்கள் கோணேஸர் கோயில் கடற்பகுதியில் மிதப்பதாகப் பரவிய தகவல்களை அடுத்தே கடந்த சனியன்று மோதல்கள் ஆரம்பமாகின.

இந்தியப் படையினரும், ஸ்ரீலங்கா பொலீசாரும் நகரில் கூட்டாக பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோதிலும் ஆங்காங்கே நிகழ்ந்த தாக்குதல் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. தமிழர், சிங்களவர் – இருதரப்பிலும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

... இந்த மோதல்களுக்கு மத்தியில் ... கிழமை ஆரம்பமான ஜீ. சி. ஈ. பரீட்சைகள் தடையேதுமின்றி நடைபெற்றன.

வியாழக்கிழமைக்குப் பின்னர் சனியன்று காலையில் தளர்த்தப்பட்ட ஊரடங்கு சிலமணி நேரத்துக்கிடையிலேயே மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

எனினும் பரீட்சை எழுதும் மாணவர்கள் ஊரடங்கு வேளையிலும் பரீட்சை மண்டபங்களுக்குச் சென்றுவர அனுமதி வழங்கப்பட்டது.

சிலமணி நேரம் மட்டுமே ஊரடங்கு தளர்த்தப்பட்டதால் உயிரிழந்தோரினதும், காயமடைந்தோரினதும் பெயர் விவரங்கள், எண்ணிக்கை போன்றவை தொடர்பாக ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெறமுடியவில்லை.

சனிக்கிழமை நண்பகலில் அமுலுக்குக்கொண்டு வரப்பட்ட ஊரடங்கு உத்தரவு ஹஜ் பெருநாளை முன்னிட்டு திங்கள் காலையில் ஆறுமணி தொடக்கம் 9 மணிவரை தளர்த்தப்பட்டது.

அவ்வேளையில் குறிப்பிடத்தக்க அளவு அசம்பாவிதம் ஏதும் நடைபெறவில்லை. எனினும் அவ்வேளையில் நகரில் வாகனங்களைச் செலுத்தவோ, சைக்கிள் ஓடவோ அனுமதியளிக்கப்படவில்லை.

மீண்டும் செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரை ஊரடங்கு தளர்த்தப்படும் எனத் திங்கள் இரவு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. (உ)

சொன்னதும்...
(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்தது.

இதனையடுத்து மக்கள் தமது அலுவல்களை மேற்கொள்வதற்காக நகருக்கு வந்துகொண்டிருந்தனர்.

தூர இடத்துக்கான போக்குவரத்துச் சேவைகளும் ஆரம்பிக்கப்படும் நிலையில் இருந்தன.

எனினும் திடீரென அமைதிப்படையினர் தமது ஒலிபெருக்கி வாகனங்களில் நண்பகல் 12 மணிக்கு மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும் என அறிவித்தனர்.

இதனையடுத்து நகரில் கூடிய மக்கள் அவசர அவசரமாக நகரை விட்டுக் கலையத்தொடங்கினர்.

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்ட தனியார் பஸ் ஒன்று நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தது [ஒ-10]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 27 07 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது, Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Wednesday 27th July 1988

மரண அறிவித்தல்

செல்வி
இராசலிங்கம் லிங்கேஸ்வரி

செல்வி இராசலிங்கம் லிங்கேஸ்வரி காலமாகி விட்டார். இவர் யாழ்ப்பாணம் நீராவியடி 'லிங்கம் மில்ஸ்' உரிமையாளர் இராசலிங்கம் மகாலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், இரஞ்சிதமலர், மனோகரலிங்கம் (கனடா), மகேந்திரலிங்கம் (கனடா), சற்குணலிங்கம் [கனடா], ரதிமலர், சாந்தமலர், சிதம்பரலிங்கம், விக்னேஸ்வரலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசுப்பிரமணியத்தின் மைத்துனியும், சொக்கலிங்கத்தின் (சவூதி) பெறுமகளும், காலஞ்சென்றவர்களான [அருணபீடிக் கம்பனி, வறக்காப்பொல] அருணகிரி, செல்வநாயகம், திருச்செல்வம் மற்றும் தவச்செல்வம் J. P., அருட்செல்வம் ஆகியோரின் மருமகளும், சரஸ்வதி தியாகராசா, வரதலெட்சுமி இராசதுரை ஆகியோரின் பெறுமகளும் மேகலா, மேனகாவின் சித்தியும் ஆவார். அன்னாரது இறுதிச் சடங்குகள் அவரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (27-7-88) பகல் 11 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
கி. இராசலிங்கம்
(தந்தை)

[5402]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org